The Lingotbhava puja is followed by the last yama puja. At this last yama, the slender streak of the first moon in its last phase, that is during the very early hours of the morning, escapes from darkness by joining the resplendent rising sun. This is symbolic of the illumination, the heavenly bliss, the moksha one achieves, where the Jivatman — the moon — merges with the Paramatman the sun on this amavasya thithi.

All the pujas, abhisekams, archanais and worship tell us that the Maha Sivaratri is a perfect vratam. Constant vigilance is imposed on the mind as the devotee fasts the whole day and engages in worship of the Lord every three hours of the night. This external puja leads one on to internal worship which is done with pure love and bhakti to the Atma Lingam. By the observances of such fasts and pujas, man is awakened to the supreme purpose in life. The human being has life on earth to work out his karma, fulfil his destiny and through constant

(Continued on page 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ORIGINAL SAIVAISM AS EXPOUNDED BY TIRUMOOLER

The Saiva Sidhanta doctrine was formulated by Tirumooler by his works Tirumantiram. Tirumooler is one of the eight disciples of Nandi known as Nandeeswaran in South India and as Nandikeswaran in North India. The BULL, the symbol of Nandi is installed in every temple and a Pooja is performed daily after the Pooja to the presiding Deity. The BULL represents the ATMA, the life force which is always on the run in all bodies. In some temples, particularly in South India the BULL has been hewn from large granite rocks and placed in temples to signify its importance.

Tirumooler himself has revealed in one of his verses that Sanather, Sanathaner, Sananthaner, Sanatkumar, Sivayoga mamuny, Patanjali and Viyakramer are the other seven disciples of Nandi. He also says that they were all sent in eight directions after attainment of spiritual wisdom. Tirumooler came to Tamil Nadu and wrote 3000 verses of Tirumantiram to explain to the Tamil people, the doctrine of Saiva Sidhantam. Patanjali who is remembered throughout India and abroad by seekers of TRUTH wrote two books namely Maha Bashye and Yoga Sutra in Sanscrit. Some of his writings were translated into English. As Tirumooler and Patanjali received instructions from the same Satguru Nandi their revelations and the path to realize the eternal Truth are same. The path is through the knowledge of SELF which is Atma within the body. The Atma Chakkaram in its movement within the body speaks a subtle WORD. The Bible says that in the beginning was the Word, the Word was with God, the Word was God. In order to identify and realize this WORD Tirumooler and Patanjali divided it into five letters Aharam, Eharam, Uharam. Ongaram and Maharam. Tirumooler called it Aintheluthu Mantiram and Patanjali referred to it as Pancha-Akshara Mantiram meaning five letters. Vedantam refers to the Atma Chakkaram before division into five letters and Sidhantam refers to it after the division. There is no difference between Vedantam and Sidhantam as they both relate to the same Atma Chakkaram. Tirumooler says, வேதாந்தம் சித்தாந்தம் வேறிலா முத்திரை.

Tirumooler himself has said that ignorant people try to find a difference between the two to enter into unnecessary arguments. It is because Sivagnanapotham is not Saiva Sidhantam. The doctrine enunciated by Tirumooler is different from that of Sivagnanapotham which was written by Meikandar during the middle ages, and it is often mistakenly considered to be the basic text of the Saiva Sidhanta Philosophy. Meikandar himself says that he is a follower of Sanatkumar and Nandi. He says,

எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழ இயல்பாய்
நந்தி உரைத்தருளும் ஞான நூல் சிந்தை செய்து
தானுரைத்தான் மெய்கண்டான் தரணியோர் தாமுணர
ஏது திருட்டாந்தத்தால் இன்று.

Although most of the educated Saivites are aware that Tirumantiram is their Scripture, they do not make an effort to study and understand the directions given therein to realize the Reality behind our existence in this universe. They do not even investigate as to when the Saivite Religion was introduced into this world. According to records left behind during the Middle Ages Tirumantiram remained hidden under the Pelipeedam at Thiruvavadudurai temple and it was discovered by the father of Tirgnanasampanthar Nayanar. It has to be stated that Chidamparam the first temple was built about 1000 years ago, whereas Tirumantiram according to reliable evidence available in the English translations of North Indian text was written 8000 years ago

P. Ramanathapillai Kalaga Pulaver and Pundit of Saiva Sidhanta Works of South India, who has published Tirumantiram in two volumes with commentaries has correctly given evidence to say that Tirumooler lived during the time of Rama, about 8000 years ago. Rama's royal preceptor was Vashister Muniver. Viyakramer one of the disciples of Nandi and colleague of Tirumooler is said to have married Anusooya a sister of Vashister Muniver.

Swami Prabhavananda of Ramakrishna Mission in his book 'The Upanishads' states under Chandogya Upanishad that Sanatkumar a colleague of Tirumooler, revealed the eternal Truth of Self, the Atma within, to Naradhar. What took place between Naradhar and Sanatkumar is reported as follows:

> "Narada once came to Sanatkumara and asked to be taught. To Sanatkumara's question "What have you already studied? Narada replied that he had studied all the branches of learning — art, science, music and philosophy, as well as the sacred scriptures. But said he "I have gained no peace. I have studied all this, but the Self I do not know. I have heard from great teachers like you that he who knows the Self overcomes grief. Grief is ever my lot. Help me, I pray you, to overcome it." Sanatkumara said "Whatever you have read is only name. Meditate on name as Brahman. Brahman's name is the unspeakable Panchachara Mantiram the subtle five letter word."

In order to ascertain, even roughly the era when Nandi and his disciples lived, further evidence is available in Srimad Bhagvata, Skanda 4. Daksha, one of the sons of Brahma went to the abode of the gods in connection with the performance of a sacrifice. Every one present stood up to receive him except Brahma and Siva. Daksha, abuesd Siva for his insulting and rude behaviour, adding that he would no more get his sacrificial offerings along with other gods.

Siva left the assembly without uttering a word. Nandikeswara (Nandeeswaran) however cursed Daksha to lose his head and get instead the head of a Goat. Turning to the Brahmins, he condemned them to be beggars as they did not understand the inner meaning of the Vedic teaching and stuck to rituals, making a trade of the sacred trust.

It is clear from this story that Nandi was regarded as a contemporary of Siva, Brahma and his son Daksha, in the first order of creation. It is therefore a blasphemy and a distortion to say that Nandi and his eight disciples including Tirumooler lived after Jesus Christ.

The doctrine of Saiva Sidhantam expounded by Tirumooler is anterior to all the known religions of this world. The doctrine of Vedantam as expounded in the four Vedas Rig, Yajur, Sama and Adharva and in the Upanishads is not different from Saiva Sidhantam except in very minor details. Some parts of the Vedas, Upanishads, Patanjali's Yoga Sutra, Bhagavat Gita and some ancient Sanscrit works by saints like Kabir Das have been translated into English by eminent scholars like Rabindranath Tagore. These translations have helped a great deal to know the era Nandi lived. P. Ramanathapillai, Sidhanta Pandit who published Tirumantiram in two volumes has therefore correctly stated that Tirumantiram is 8000 years old.

Tirumooler in his verse 1478 under Sanmargam

சைவப் பெருமைத் தனி நர்யகன் நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்று உண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்துய்ய
வையகத்துள்ளார்க்கு வகுத்து வைத்தானே.

Nandi is the one and only Nayakaya (Lord) for the greatness of Saivaism. For the redemption of man there is a path Guru Neri which he formulated. It is a path leading to realization of TRUTH (Siva). He formulated this holypath for the people living in this world, to achieve liberation. I shall repeat the verse again.

What existed millions and millions of years ago before the Universe came into existence is Bindu (Vindu). It is (static) energy millions of times forceful and powerful than the atom. From it emanated (kinetic) energy called Nadam. Bindu in colloboration with Nadam areated a chakkara, a wheel which Tirumooler and Patanjali plotted into five letters. This energy concentrated Chakkara created the universe and all that it contains. This revelation is in accord with the BIG BANG theory of Astro-physicists. The Chakkara the wheel of five letters which is the product of Bindu and Nadam is the wheel of life force within all living beings. This wheel while revolving within the body recites a subtle word AUM. It cannot be uttered by the mouth and it is what is called MANTIRAM. Tirumooler says in verses 1280 & 85.

விளைந்த எழுத்தது விந்துவும் நாதமும்
விளைந்த எழுத்தது சக்கரமாக
விளைந்த எழுத்தவை மெய்யினில் நிற்கும்
விளைந்த எழுத்தவை மந்திரமாமே.

He further says,

நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்
வான் பற்றி நின்ற மறைபொருள் சொல் குவன்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப்பற்றத் தலைப்படும் தானே.

The Atma chakkara within all bodies recites the Word Aum and that is what sages and saints have described as SELF. The Upanishads say that Atman in sanscrit means God within. The Vedas, Bhagawat Gita, Tirumantiram and other works of true sages, yogies and jnanies have unequivocally stated that knowledge of the self is the gateway to realize the TRUTH, God.

## MAHA SIVARATRI...

*(Continued from page 4)*

spiritual practices, he understands the Divinity withim him. He is then truly in tune with the Lord, for his mind melts in the Cosmic mind.

Thus when one analyses the arduous fast, one could say that the observance of Sivaratri is a fore-runner of one's intense and constant spiritual practices for God realisation. Our whole life on this earth could be likened to the ratri. By observing vigil during this ratri of the worldly life in which we tend to get enmeshed, we are made to realise the dangers of getting unduly involved and thereby forget the real purpose of our life in this world. Instead of looking for happiness in external objects, these fasts help us to look inward, Repeating the Lord's Name and the Panchakshara mantram, performing abhisekams and archanis with vision of His beautiful form in the mind we pass from darkness into light.

May all the aspiring souls in the world be divinely inspired in order that they may understand the spiritual lesson and the significance of this grand Sivaratri fast, thereby enabling them to reach their ultimate destiny.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக் குரல்
HINDU VOICE

JANUARY 1993 மார்கழி - தை

# SELFLESS SERVICE

The Hindus of this country have formed themselves into different religious organisations all over the Island. The membership of these organisations is drawn from all levels of people, belonging to all classes and engaged in a variety of pursuits. The only common factor is that they are all Hindus aiming at the fulfilment of the great ideals of mutual friendship and selfless service. On the human plane we can no doubt serve our fellow beings. But we must enter deep down within us and become aware of the spiritual kinship by which we are bound together and in which all distinctions are lost. It is only on this spiritual basis that we shall be able to establish a truly universal brotherhood in this world which will dispel all clouds of discord, strife and war that are hanging over us. Unless we join together in a spirit of oneness, based upon the consciousness of the indwelling God or Reality within oneself, we cannot find a true basis for peace and harmony in the country. This is possible only when we shed our preconceived notions, our individual leanings and selfish ambitions. Unless we do that, our ego sense will not leave us and we cannot be true instrumants in the hands of God to serve the world.

We Hindus have formed ourselves into groups with the object of communicating with each other, serving each other, assisting each other as friends, as fellow Hindus. Our ultimate aim is to serve our religion, and, through so doing, serve our community and our country. As a matter of fact those of us belonging to the Hindu fold must consider ourselves as more than friends. We should realise that the Divine Spirit is dwelling within all of us and that we are linked together not merely by an external friendship or mental affinity, but because of the Divine Chord running through all of us. We have been told by saints and sages and by great spirtual masters that God dwells within our hearts. We must always be conscious of His presence by tuning our mind with Him through prayers and meditation and by dedicating all actions, all services, to Him. Action done for the service of humanity as a whole really proves to be action dedicated to Him. We seldom understand this and we perform our services in a spirit of competition and rivalry. It is this spirit of competition and rivalry that has brought all the calamity upon us. God is the Universal Light. It is this Light within us that makes us active in this world, and if we are aware of this, our life will flow out spontaneously for the uplift of all the world. Let our services done through our organisations be complementary to each other so that all of us may benefit therefrom. In such service we shall find real peace and joy. So long as we think that we are merely individuals, separate from the Universal Reality, we hold on to the belief that we do everything, and hence the spirit of fear, jealousy and rivalry. So long as we do not unite our self with God, we shall be scared and distracted throughout our life. We cannot have peace and joy. It is the earnest wish of the Hindu Council that we should all work together in the cause of peace, harmony and joy throughout the Country.

## Deshabandhu

*Ms N Kasipillai, a Vice President of the Hindu Council of Sri Lanka, was recently honoured by the President of Sri Lanka with the title of Deshabandhu — Our heartiest congratulations and best wishes go to her. May she live long to be of service to the cause of Hinduism, which promotes the welfare of humanity.*

## WE INVITE

From our readers news items, views and articles. The Editor will choose the ones necessary for publication.

**Editor**

5, Moor Road, Colombo 6.

# A THOUGHT - ARISE! AWAKE!! AND STOP NOT TILL THE GOAL IS REACHED

"Arise! awake!! and stop not till the goal is reached" is the rousing call of Swami Vivekananda. What is this goal? one may ask. It is to awaken one from the slumber of ignorance and illusion which confuse him and realise the Divinity within oneself.

Human life is short but gives man the golden opportunity to realise the Almighty deep within him, by the performance of his duty, adhering to the various disciplines, serving mankind and therby serving God. All physical, moral, social and spiritual endeavours in this universe are nothing but a progressive manifestation of the one Divine urge expressed as man's pilgrimage to perfection — mukti. Absolute happiness comes only through liberation which frees the Soul from bondage and the cycle of births and deaths and unites it to the Supreme One. Unfortunately, due to his ignorance and his inadequacy, man tries to seek happiness only in the world of materialism. In this search, he is caught up in the alternating experiences of pain and pleasure, though deep down, unknowingly, he longs for re-union with God, where from he comes and where he has to return.

The one who lives in the consciousness, "I am the Atman", not the body with its mental and physical attributes, truly lives an eternal life passing through the portals of death, liberated. He mingles with the vastness of life eternal. He realises, "I am That — Aham Brahman Asmi", as the Vedantist says or becomes "One with Him", as the Siddhantst says. Thus the goal of man is to realise this Divine Oneness and get absorbed into the immensity of it. Hinduism teaches man that the first step towards this is to be aware of his Divine nature, have faith in himself and serve God by serving others. To have faith in oneself springs from the Upanishadic Truth — "I am the Spirit; Me the sword cannot cut; nor any weapon pierce; nor fire burn; nor air dry. I am Omnipresent; I am Omniscient". This teaches us a fundamental Truth that no power in the Universe could hurt us, unless we first hurt ourselves. The ideal of having faith in oneself, helps man to go forward and be better than what he is. It is because of this that the ancient rishis declared, "Look not for the Truth outside — it is here in the human Soul, the miracle of all miracles, the emporium of all knowledge, the mine of all existence — seek here". And Swami Vivekananda in his telling way condensed this Truth into a nutshell and said at the Parliament of Religions — "So then the Hindu believes that he is the Spirit — and where is death for the Spirit"? It is for us to realise and experience this Truth.

Saint Manikkavasagar in the Tiruvembavai hymns delineates the mental awakening and spirituality of the maidens at Tiruvannamalai. In mundane parlance, these songs would be mere dialogues between maidens who arise early in the morning in the month of Margali, go to the temple tank for a bath awakening their companions on the way. But they convey something more. The very act of rising early, bathing and washing away the bodily dirt is symbolical of the washing away of the three malas — anavam, kanmam and maya which enmesh man in the material world. These songs are heart felt prayers for the awakening from a state of ignorance to that of spiritual enlightenment. The mind of man is covered with the stains of greed, lust, ignorance, anger, delusion etc and Saint Manikkavasagar through these immortal composition helps man to arise and remove these layers and realise the Divinity within.

Once we have awoken from ignorance, we must stay awake and not lapse into our old ways. Good intentions towards the practice of spiritual disciplines like prayer, japam, meditation are important. In the Shiva Sankalpa hymn the enlightened devotee's earnest request is to remain vigilant. Sri Ramakrishna Paramahamsa in an apt way speaks of this as — "One may have the Grace of God, the spiritual teacher and the holy men, but if one does not have the grace of one's own mind, everything comes to naught". The good intentions must necessarily be coupled with unswervering spiritual disciplines or the chances of lasping back into indifference and slumber are great.

May we through our spiritual practices arise, awake and stop not till the goal is reached.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூதன மொன்றுமில்லை

ஆவதோ ஒன்றுமில்லை அழிவதோ ஒன்றுமில்லை
நோவதேன் பிறர்தம் மாட்டு நூதன மொன்று மில்லை
தேவனை வேண்டி நின்றால் சீவனே சிவனாய்த் தோன்றும்
பூவலந் தன்னில் மீண்டும் பிறப்பரோ புகலுவாயே

புகல்வதற் கொன்றுமில்லை புண்ணிய பாவ மில்லை
இகல்செயும் மனத்தைவென்றே யீசனை வேண்டி நின்றால்
நிகருனக் கியாரு மில்லை நீயிதை யறிந்து மண்ணில்
இகலுடன் வாழுவாயே இதுதிட மறிகு வாயே

அறிகுதி யறிவினாலே அறிகுதி தன்னை யென்றான்
பிறிவற நின்று பார்த்தாற் பிரம்மமே நீயும் நானும்
குறிகுண மொன்று மின்று கூடுதல் பிரித லின்று
செறிதரு முயிர்களென்று செப்புதற் கொன்று மின்றே

இன்றென நாளை யென்றே எண்ணுதற் கிடனோ வில்லை
அன்றுசெய் வினையினாலே அவனியிற் பிறந்தோ மென்று
கன்றினைப் பிரிந்த கற்றாக் கடுப்பவே கதறு கின்றோம்
மன்றினின் றாடு மீசன் மலரடி வழுத்து வோமே

வழுத்துதற் கொன்று மில்லை மாரனை நெற்றிக் கண்ணாற்
கொளுத்திய குழகன் றன்னைக் கும்பிட்டுக் கூற்றை முன்னர்
விழுத்திய பரிசு கண்டே வேறொரு நினைப்பு மின்றி
வழுத்தியைந் தெழுத்தை நெஞ்சில் வஞ்சக மற்று வாழ்வீர்.

சிவயோக சுவாமிகள்

# சிவராத்திரி விழா

இந்து உலகின் பண்பாட்டின் ஒருமைப்பாட்டினை விளக்கி வலியுறுத்தும் வகையில் உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள மக்களால் தொன்றுதொட்டு, எத்தனையோ பல நூற்றாண்டுகளாகக் கொண்டாடப்பெற்று வருகின்ற விழாக்க ளில் சிவராத்தி விழாவானது மிகவும் சிறப்பானது. சிவராத்திரி வழிபாட்டிற்குப் பெரிதும் சிறப்புடையனவாகப் பாராட்டப்பெறும் ''ஜோதிர் லிங்கங்கள்'' பன் னிரண்டும் பாரதநாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்து சிறப்புற விளங்கிவரு கின்றன. (1) சௌராட்டிரத்துச் சோமநாதர் (2) ஸ்ரீசைலம் மல்லிகார்ச்சுனர் (3) உஜ்ஜயினி மகாகாளர் (4) ஓங்காரப் பரமேசுவரர் (5) கேதாரநாதத்துக் கேதாரேசுவ ரர் (6) கோதாவரிநதிக் கரையில் டாகினி என்னும் தலத்திலுள்ள பீமசங்கரர் (7) சித்தபூமியில் திகழும் வைத்தியநாதர் (8) தாருகாவனத்து நாகேசர் (9) நாசிக்கரு கில் கௌதமியாற்றின் கரையில் விளங்கும் திரியம்பகேசுவரர். (10) இராமேசுவர இராமநாதர் (11) காசிவிசுவநாதர் (12) சிவாலயத்துக் குசுமேசர் என்னும் சோதி லிங்கங்கள் பன்னிரண்டும், சிவராத்திரி விரதத்தின்போது தரிசனம் செய்து வழிப டுவதற்குப் பெரிதும் சிறப்புடையனவாக விளங்கிவருகின்றன. இத்தலங்களிற் சிவராத்திரியின் போது பெருந்திரளான அன்பர்கள் சென்று வழிபட்டு வருகின்ற னர்.

**சிவராத்திரி வரலாறுகள்**

1. சிவராத்திரி விரதத்தின் வரலாற்றினைப்பற்றி நூல்கள் பலவகைகளில் விளக்கிக் கூறுகின்றன. ஒருசமயம் சிவபிரான் பேரொளிப் பிழம்பாகத் தோன்றி வெளிப்பட்டு அருளினான். அங்ஙனம் வெளிப்பட்டு அருளிய இரவே சிவராத்திரி எனப்பெறுவதாயிற்று. அச்சிவராத்திரியில் இறைவனைப் பரவிப் பலரும் உய்ந்த னர் எனக் கந்தபுராணம் கூறுகின்றது. (அடிமுடிதேடுபடலம்)

2. ஒருகால் உலகங்கள் எல்லாம் பிரளயத்தில் அழுந்தி, உயிர்கள் அனைத் தும் மடிந்து மறைந்தன. அக்கற்பமுடிவின் இரவில் நான்கு யாமத்தும் உமையம் மையார் இறைவனை ஆகமவிதிப்படி அருச்சனை புரிந்து வழிபட்டு மகிழ்ந்த னர். அன்றியும் அதுபோல அம்மையார், உயிர்களெல்லாம் உய்ந்து ஈடேறுதற் பொருட்டு ஐந்தொழில்களைத் தொடங்கி இயற்றியருளுமாறு இறைவனைப் பணிந்து வேண்டிக்கொண்டனர். அவ்விரவே சிவராத்திரி ஆயிற்று என்பர் மற் றும் சிலர்.

**''நாயகன் கண்ந யப்பால் நாயகி புதைப்ப எங்கும் பாய் இருள் ஆகி மூடப்பரிந்து லகினுக்கு நெற்றித் தூயநேத்திரத்தினாலே சுடர்ஒளி கொடுத்த பண்பில் தேயமார் ஒளிகள் எல்லாம் சிவன் உருத் தேசது என்னர்''**

எனச் சிவஞானசித்தியாரில் **அருள்நந்தி சிவம்** குறிப்பிடுதல்போல, தாம் இறைவ னின் திருக்கண்களை மூடி உலகுயிர்கள் இருளில் அழுந்தி வருந்துமாறு செய்த பிழை தீரும்படி, அம்பிகை சிவராத்திரியின் நான்கு யாமங்களிலும் ஆகமவிதிப் படி சிவபிரானைப் பூசித்து அருள் பெற்றனர் எனவும் கூறுவதுண்டு.

3. இனி, வேறொருவகையாகவும் சிவ்ராத்திரியின் வரலாறு இயம்பப்ப டும். திருப்பாற்கடலில் ஆலாலம் என்னும் கொடிய நஞ்சு தோன்றியபோது, அதன் மெம்மைக்கு ஆற்றாது அஞ்சி நடுங்கிய தேவர்கள், அடைக்கலம் புகுந்த போது, அதனைச் சிவபிரான் உண்டு தமதுமிடற்றில் அடக்கியருள, அப்பெரு மானை அவர்கள் பேரன்புடன் வழிபட்டு உய்ந்த இரவே சிவராத்திரியாகும் எனவும் பிறவாறும் பெரியோர்கள் கூறுவர்.

**அநுட்டித்துப் பயன் அடைந்தோர்:**

இச்சிவராத்திரி விரதத்தினைச் சூரியன், சந்திரன், முருகன், இயமன், மன்ம தன், இந்திரன், அக்கினி, குபேரன் முதலியவர்கள் அநுட்டித்துத் தத்தம் மனத்தில் விரும்பிய நன்மைகளை அடைந்து மகிழ்ந்தனர் என நூல்கள் கூறுகின்றன.

**''இந்த நல்விரதந் தனைச்சிவன் நந்திக்கு
இசைத்திட உணர்ந்து, செங்கதிரோன்
கந்தவேள், கதைக்கைக் காலன்விற் காமன்
கடவுளர், கண்ணொர் ஆயிரத்தோன்,
செந்தழற் கடவுள், மதி, நிதிக் குபேரன்
செப்பிய வரன்முறை நோற்றுத்
தந்தம் மனத்தில் விழைந்தன பெற்றுத்
தகைபெறு தலைவர் ஆயினரால்''**

**முசுகுந்தன்:**

பண்டொரு காலத்தில் வானை அளாவிய பூங்காவில், ஒரு வில்வமரத்தின் அடியில் சிவபெருமான் உமாதேவியாரோடு எழுந்தருளியிருந்தனர். அப்பொ ழுது மரங்களில் வாழும் இயல்புடையதாகிய முசுக்கலை (குரங்கு) ஒன்று, அவ் வில்வமரத்தின் இலைகளைப் பறித்து அம்மையப்பர் திருமேனியின்மீது போட் டுக் கொண்டிருந்தது. அந்நாள் சிவராத்திரியாக விளங்கியது. சிவபிரான் தனது பெருங்கருணைத் திறத்தால், அக்குரங்கைச் சினவாமல். அது தன்னைச் சிவராத் திரி நாளில் வில்வத்தளிர்களாற் பூசித்ததாகக்கொண்டு மகிழ்ந்து அதற்குப் பேர ருள் புரிந்தார். அதன் பயனாக அம்முசுக்கலையானது முசுகுந்தன் என்னும் சோழ வேந்தனாகப் பிறக்கும் பேறுபெற்றது. முசுகுந்தன் என்னும் சோழ மன்னனின் புகழ் **சிலப்பதிகாரம் மணிமேகலை கந்தபுராணம் கலிங்கத்துப்பரணி** முதலிய நூல்களிற் சிறப்புறக் குறிப்பிடப்பெற்றுளது. இம்முசுகுந்தனே, தேவேந்திரனி டம் இருந்து தான் பெற்றுக் கொண்டுவந்த தியாகராசர் திருவுருவங்கள் ஏழினை யும்,

**''சீரார் திருவாரூர் தென்நாகைநள்ளாறு
காரார் மறைக்காடு காறாயில்—போரக
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்''**

என்ற வெண்பாவாற் குறிக்கப்படும் ஏழுதலங்களிலும், எழுந்தருளச்செய்து மகிழ்ந்தனர் என்பர்.

**மகாசிவராததிரி**

மாசி மாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசி கூடிய நாள் மகாசிவராத்திரியாம். திரயோதசியும் சதுர்த்தசியும் கூடிய இரவு சிவலிங்க சொரூபமாம். அத்தகைய சிவராத்திரியிற் சிவ பூசை செய்தால்,

**''.........பன்னிரு கோடி
மூலமாம் இலிங் கங்களை முறைமையிற் சென்று
சீலமோடு கண்டுறு பயன்
சிறப்புறச் செறியும்''**

**அநுட்டிக்கும் முறை:**

சிவராத்திரி விரதம் அநுட்டிக்க விரும்புபவர்கள், அதற்கு முன்னாள் ஒரு வேளையுண்டு, தூய்மையும் ஒழுக்கமும் பேணி அன்றிரவு துயின்று, மறுநாள் சிவராத்திரி தினத்தன்று வைகறைப்பொழுதில் துயில் எழுந்து, புண்ணிய தீர்த்தத் தில் நீராடுக. சூர்யோதய வேளையிற் காலை அநுட்டானங்களை இயற்றித் திருக் கோயிலுக்குச் சென்று சிவபிரானை விதிப்படி பணிந்து வழிபடுக. அன்று பகல் முழுதும் சிவசிந்தனையோடும் சிவத்தியானத்தோடும் தூய்மையாக இருக்க! சிவபூசைக்குரிய பொருளையெல்லாம் கருத்துடன் தொகுத்து வைத்துக்கொள்க. அவற்றில் இயன்றனவற்றைச் சிவாலயத்திற்கும் கொடுத்து அங்கு அர்ச்சனை முதலியன நிகழ ஏற்பாடு செய்க. வீட்டிற் பூசையறையைக் கோமயத்தால் மெழு கித் தூய்மை செய்து கோலமிட்டு அழகுபடுத்துக. மாலையிற் சிவாலயஞ் சென்று தரிசனம் செய்து மீள்க. மீண்டதன்பின் சிறிதுநேரம் கழித்து நீராடி, அநுட்டானங் களை முடித்துக்கொண்டு, சிவபூசை செய்யத்தொடங்குக. அதனை ஆகமவிதிப் படி முறை தவறாமற் பக்தி சிரத்தையுடன், யாமத்திற்கு ஒரு முறையாக நான்கு யாமங்களிலும் செய்தல் நலம் பயக்கும்.

**அபிடேகம்**

அங்ஙனம் சிவபூசை செய்யுங்கால் பால் தயிர் தேன் சர்க்கரை இளநீர் பன்னீர் எலுமிச்சம்பழம் சந்தனம் விபூதி முதலியவைகளைக் கொண்டு நான்கு யாமங்க ளிலும் வழிபாடு நிகழ்த்துக. பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், தேன், கருப்பஞ்சாறு என்பன கொண்டு முறையே அபிடேகம் செய்க.

**அலங்காரம்:**

நான்கு யாமங்களிலும் முறையே அகிற்குழம்பு வில்வத்தளிர், சந்தனம் தாம ரைமலர், பச்சைக்கற்பூரம் முல்லைமலர், குங்குமப்பூ நந்தியாவர்த்தமலர் என்ப னவற்றைக்கொண்டு இறைவனுக்கு அலங்காரம் செய்க.

**அர்ச்சனை**

நான்கு யாமங்களிலும் முறையே தாமரைமலர், துளசியிலை, வில்வத்த ளம், நீலோற்பலமலர் என்பன கொண்டு அர்ச்சனைபுரிக.

**நிவேதனம்:**

நான்கு யாமங்களிலும் முறையே பயற்றம்பருப்புச் சேர்ந்த பொங்கள், பாய

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகச் சாமி

## திருமதி. சோதி பொன்னுத்துரை — ஊரெழு

சிவபூமி என்று போற்றப்படும் ஈழத்தில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் ஒரு ஞானப்பரம்பரை-பழவடியார் கூட்டம் வாழையடி வாழையாக வளர்ந்து கொண்டே வருகிறது. நாமறிந்தவரையிற் கடையிற் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், சின்னத்தம்பி சுவாமிகள், முத்துக்குமார சுவாமிகள், அம்பலவாண சுவாமிகள், ஆறுமுக சுவாமிகள், பொன்னப்ப சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், அப்பாத்துரை சுவாமிகள், (திருமலை) மகாதேவ சுவாமிகள், இடைக்காட்டுச் சுவாமிகள், மூச்சம்புலவுச் சுவாமிகள், (வல்லிபுரம்) சடைவரதர் என்றெல்லாம் திருவடியார் கூட்டம் வெவ்வேறு காலத்தில் நிலவி வந்துள்ளது. அந்த திருவடியார் பரம்பரையில் அண்மைக்காலம் வரை தெய்வீக ஒளியை வீசிக்கொண்டே இருந்தவர்கள் கோண்டாவில் கந்தையா சுவாமிகள், செல்வச்சந்நிதி முருகுப்பிள்ளை சுவாமிகள், திருக்கேதீஸ்வரம் சபாரத்தினம் சுவாமிகள், திருகோணமலை கெங்காதரானந்த சுவாமிகள், கிளிநொச்சி வடிவேல் சுவாமிகள்,கைதடி மார்க்கண்டு சுவாமிகள், சாவகச்சேரி அருணசலம் சுவாமிகள் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். இலைமறை காய் போல வாழும் ஞானவான்கள் பலர் எமது கண்ணுக்கு உட்பட்டும் படாமற் தம்மைக் காட்டாமலும் வாழ்கிறார்கள் எனலாம்.

பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வரத்திற்கு யாத்திரை செய்கின்றவர்களில் தென்மேல் பாரிசத்தில் அமைக்கப்பட்டிருக்கும் திருவாசக மடத்தைத் தெரியாதவர்களில்லை. திருவாசகத்திற்கும் மடத்துக்கும் உள்ள தொடர்பின் பின்னனியிலேதான் திருவாசகச் சாமிகள் திகழ்கிறார்கள். திருவாசகத்தில் ஒருவருக்கு இருந்த உறைப்பான பற்றுத்தான் திருவாசக மடத்தை உருவாக்கியது. தன் கையினாலே கால்கோளிட்டு, திருவாசக மடம் என்ற திருப்பெயரையும் சூட்டி பலருடைய பேருதவியினால் பூரணப்படுத்திவிட்டு, கௌரியம்மன் வாசலில் ஓர் குடிசையில் வாழும் சபாரத்தினம் சுவாமிகளைத் தெரியாத அடியார்களும் அன்பர்களும் இல்லை எனலாம்.

அப்பருடைய தோற்றம், ஆளுடைய பிள்ளையின் குழந்தைத் தன்மை, தோழமையான சுந்தரர் போக்கு, மணிவாசகரின் ஞானம், இளையான் குடிமாறன் அப்பூதியடிகள் உடைய தொண்டு எல்லாம் ஒருங்கிணைந்தவர் தான் இவர். ஒரு காலத்தில் சிவகாமியாண்டார் போல மாலை கட்டி கௌரிக்கு அணிந்து அழகு பார்ப்பதிலும் ஈடுபட்டிருந்தார்கள். சுமார் 45 ஆண்டுகளுக்கு மேலாகத் திருக்கேதீஸ்வரத்தில் தொண்டு செய்துவந்த சபாரத்தினம் சுவாமிகள் திருவாசகத்தையே மூச்சாயும், பேச்சாயும், உயிராயும் கொண்டவர். வேளாண்மை செய்து கறவைகளை வளர்த்து அடியார்களுக்கு அறுசுவையுண்டியளிப்பதில் இன்பம் கண்டவர். தூய வெண்மையுடையணிந்து வந்த இவர் கதிர்காமத்தில் மலையிற் கிடைத்த உருத்திராக்க மாலையையும், சண்முகவடிவேல் கொடுத்த காவியுடையையும் அண்மைக் காலங்களிலணிந்துள்ளார்.

சிவஞானபோதம், திருவாசகம் இரண்டையும் குழைத்துத் தாம் செல்லுமிடமெல்லாம் முழக்கம் செய்து வந்தவர். திருவாசகத்தின் முழுப்பதிகங்களும் தலையங்கங்களும், கீழ் விளக்கங்களும் எந்த நேரமும் சொல்லக்கூடிய வகையில் மனப்பாடமாகி திருவாசகத்துடன் ஒன்றி நிற்கும் இவருக்குத் ''திருவாசகச்சாமி'' என்ற பெயர் தானே வந்துவிட்டது. சபாரத்தினம் சுவாமிகள் என்றால் திருவாசகம் தான். இவரோடு ஈடுபாடுள்ள அத்தனை உள்ளங்களிலும் திருவாசகம் இரண்டறக் கலந்து நிற்கிறதென்றால் அப்பெருமை இம் மகானுக்கே உரியது.

இவருடைய பெருமையை திருக்கேதீஸ்வரம் கிள்ளை விடு தூது கூறுவதைக் காண்போம். கிளி சண்டேஸ்வரர் சந்நிதியில் தரிசனையை முடித்துக் கொண்டு வெளி வீதிக்கு வந்து என்ன செய்கிறது.

**'''ஆரும் பெருந் தவத்தோன் அன்புருவோன் — ஈரநெஞ்சன்**
**தெய்வ நலஞ் சேர் திருவாசகச் சாமி**
**செய்ய சபாரத்தினம் தான் சென்று பணிந்து — உய்யத்**
**திருவாசக மடத்தைச் சேர்''**

**''மேற்றிசையை நோக்கின் விரவும் மரச்சோலை**
**தோற்றுமதன் நாப்பணோர் தொல்குடியில் — நோற்றுயரும்**
**அன்புருவன்! என்புருவன்! ஆன்றதிரு வாசகத்தேன்**
**இன்புடனே ஈந்துவக்கும் ஏற்றமுளான் — தென்புதர**
**வீற்றிருக்கும் யோகி விரதிசபா ரத்தினமாம்**
**சாற்றரிய சாமிகுரு தாள்பணிந்து — பேற்றிலுயர்**
(திருக்கேதீச்சரநாதர் வண்டுவிடு தூது பக்12)

திருவாசகம், திருவாசக மடம், திருவாசகச் சாமி இவற்றுள்ளே ஊடும் பாவுமாய் நிற்கும் திருவருட் பிரகாசம் எல்லாம் இன்றைய தலைமுறைக்கு அப்பாலே என்றும் நிலவும் போது சபாரத்தினம் சுவாமிகளின் பெருமை பேசாமற் பேசப்படும் திருக் கூட்டச் சிறப்பைச் சேக்கிழார்

**''கூடும் அன்பினில் கும்பிடவே யன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்**
**பாரம் ஈசன் பணியல தொன்றிலர்**
**ஈர அன்பினர் யாதுங் குறைவிலர்''**
என்று பாடியுள்ளார்.

இதற்கு இலக்கியமாய்த் திகழ்பவர் தான் திருவாசகச் சாமி. சுமார் 85 ஆண்டுகள் வாழ்ந்தவர். மாசின் மணியின் மணி வார்த்தையைச் சென்ற இடமெல்லாம் மணக்க வைத்த இம்மகான் பழைய அடியார்க்கு யாத்திரைப் பத்தைப் படிக்கும் படி அறிவுறுத்துவார்.

திருவாசகச் சுவாமியெனப் போற்றப்படும் சபாரத்தினம் சுவாமிகளைப் போல வாழும் ஞானப் பரம்பரையில் இன்றும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மகான்களின் பெருமையைத் தாம் ஈடுபட்டிருக்கும் வகையில் வெளியிடுவது எதிர்காலத்திற்கு மிக வேண்டியதாகும்.

சபாரத்தினம் சுவாமிகள் 1988 தை 25இல் சமாதியடைந்தார். இவரின் நினைவாலயம் மறவன்புலவில் நிறுவப்பட்டுள்ளது.

# திருநாவுக்கரசு நாயஞர் குருகுலம்

கிழக்கிலங்கையிலே அம்பாரைமாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் சைவ சமயத்தவர்களின் மேம்பாட்டை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் செயல் புரிந்து வரும் சமய நிறுவனங்களுள் ஒன்ருகும்.

இக்குருகுலம் இந்துசமயம், கலாச்சாரம், பொருளாதாரம், கல்வி என்பனவற்றை முன்னேற்றி மேம்படச் செய்யும் நோக்குடன் 1978.01.06ல் ஸ்தாபிக்கப்பட்டது.

இக்குருகுலம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து அம்பாரை மாவட்டத்தில் சிறந்ததொரு இந்து சமய நிறுவனமாக சேவையாற்றிக் கொண்டிருக்கின்றது.

இக்குருகுலம் தன்னகத்தே ஓர் கட்டிடத் தொகுதியை கொண்டுள்ளது. கனக சபை மண்டபம், சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் கூடம், கிணறுகள் மலசலகூடங்களைக் கொண்டுள்ளது. இவற்றின் 75% வீதமான வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. மேலும் அண்மையில் வீசிய புயலிஞல் எமது குருகுலம் பலத்த சேதத்துக்குள்ளாகி அதன் 110 அடி சுற்றுமதிலை முற்ருக இழந்துள்ளது. இத் திருத்த வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இதன்பால் சைவமக்களுடைய உயரிய ஒத்துழைப்பும் உதவியும் வரவேற்கப்படுகின்றது.

இக்குருகுலத்திலே தாய் தந்தையை இழந்து திக்கற்ற கைவிடப்பட்ட 25 அனாதை மாணவர்கள் புகலிடமாகியுள்ளார்கள். அவர்களை சமுதாயத்தின் நற்பிரஜையாக்கும் பணியில் குருகுலம் 93.02.04ல் மூன்றாண்டை பூர்த்தி செய்துள்ளது.

இவ் வருமையான சிவப்பணியிலே பங்கெடுத்து உதவியவர்கள் பலர். பெருமளவிலும் சிறுமளவிலும் நன்கொடை தந்தவர்கள் பலர். இத் தரும சீலர்களின் பணம் இன்றேல் இக்கைங்கரியம் நிறைவேறி இருக்க முடியாது. இவ் வுத்தம பெரியோர்கள் அனைவருக்கும் திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் நன்றி கூறவிரும்புகின்றது. இறுதியாக இத் தொண்டினை வெற்றிகரமாக நடாத்த உதவிய அனைவருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றிகள்.

**என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்,**
**ஒன்று காதலித்துள்ளமும் ஓங்கிட**
**மன்று ளாரடி யாரவர் வான்புகழ்**
**நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.**
திருச்சிற்றம்பலம்.
அன்பே சிவம்.

**குருகுல நிர்வாகஸ்தர்**

## சிவராத்திரி...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

சம், எள்ளன்னம், சுத்தான்னம் என்பனவற்றை இறைவனுக்கு நிவேதனம் செய்க. நிவேதிக்குங்கால், ஒவ்வொரு யாமத்தும் தூப தீப ஆராதனைகளைச் சிறப்புற விதிப்படி இயற்றுக.

**பாரணை:**

இங்ஙனம் நான்கு யாமங்களிலும் சிவபூசை செய்யுங்கால், தேவார திருவாசகத் திருமுறைத் தெய்வப் பாடல்களை மனமுருகிப் பாடுக. இங்ஙனம் இரவு முழுவதும் துயிலை நீக்கிப் பூசைசெய்து, மறுநாள் வைகறையில் நீராடிக் காலை அநுட்டானங்களை முடித்துச் சூரியன் உதித்து ஆறு நாழிகைக்குள் பாரணை செய்க.

இங்ஙனமெல்லாம் முறைப்படி செய்ய இயலாத முதியோர், நோயாளர் முதலியோர் தம்மாலியன்றவளவு தியானம், செபம், சிவாலயதரிசனம், புராணபடனம் முதலியவற்றில் ஈடுபட்டு நின்று இவ்விரதத்தினை அன்புடன் அநுட்டிக்கலாம். ஏனெனில் அளவுக்கதிகமாக உடலை வருத்திஞல் விரதத்தில் வெறுப்புத் தோன்றும். இதஞல் விரதபலன் இல்லாமற் போய்விடும்.

சிவராத்திரி விரதத்தினை முறைப்படி அநுட்டிப்பவர் வேண்டிய வேண்டியவாங்கெய்துவர். காமிய பலன்களை வேண்டி நோற்றவர்கள் கடன், வறுமை, நோய், பயம் முதலான நீங்கப்பெறுவர். நிஷ்காமியமாக நோற்றவர்

**''மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை**
**ஆழா மேயருள் அரசே போற்றி''**

என மணிவாசகர் அருளியவாறு தாமும் இறையருள் பெற்றுத் தமக்குரிய மூவேழ் தலைமுறைச் சுற்றத்தினரையும் உய்வித்து நலம் எய்துவர்.

**''மாசி மகத்திற் சிவநிசியின்**
**மழுமான் ஏந்தி மலர்ப்பாதம்**
**பூசை புரிவோர் தாம்வேட்ட**
**போகம் முழுதுங் கைக்கொள்வார்''**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரின்பப் பெருவாழ்வு (3)

நாம் நெற்றியில் அணியும் மூன்று திருநீற்றுக் குறிகளும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றையும் குறிப்பன என்று சொல்லப்படும். அதாவது இவ்வுலக வாழ்க்கையின் அடிப்படை அம்சங்கள் அவையாகும். முதலில் வரவேண்டியது மாயை. பிரமத்தின் இன்னொரு தோற்றமே மாயை. அந்த மாயையால் ஏற்படுவதே ஆணவம். அதாவது மாயையே நான் எனது என்ற ஆணவத்தினால் ஏற்படக்கூடிய எண்ணங்களைத் தோற்றுவிக்கிறது. அவ்வாறு ஏற்படும் ஆணவத்தினுலேயே ஐம்புலன்களின் செயற்பாடால் கருமங்களில் ஈடுபடவேண்டியுள்ளது. இதனை மேலும் விளக்குவதானல் மாயை என்பது கற்பனைகளை உண்மைகளென்றும், உண்மைகளைக் கற்பனைகளென்றும் எண்ணுவிக்கும் மயக்கநிலை. இந்த மயக்கநிலையில் இருக்கும் அவனுக்குத்தான் ஆத்மா என்ற உண்மை புலப்படுவதில்லை. அப்படிக் கற்பனையை உண்மையென்று கருதும் மனிதன் தானேயல்லாத உடலுக்கு வேறு பொருட்களுடனும் வேறு உடல்களுடனும் சொந்த பந்தங்கள் ஏற்படுத்திக் கொண்டு அவற்றுடன் தன்னைத் தொடர்பு படுத்திக்கொண்டு அவற்றின் வளர்ச்சிற்கும் பாதுகாப்பிற்கும் அழிவிற்கும் ஆக்கத்திற்கும் செயல்களில் ஈடுபடும்போது ஆணவமேலீட்டால் கருமங்களைச் செய்கிறுன் என்று கூறலாம். இவ்வாறு ஆணவமேலீட்டால் கருமங்களைச் செய்யும்போதே இன்பம் துன்பம், மகிழ்ச்சி பொறுமை, பெருமை சிறுமை, அனுதாபம் கோபம் போன்ற உணர்ச்சிகள் தோன்றுகின்றன. இவை உண்மையில் ஆத்மாவுக்கு ஏற்படக்கூடிய உணர்ச்சிகளன்று. இந்த உடலைத் தான் என்று எண்ணும் மனிதனுக்கு ஐம்புலன்களினல் ஏற்படுவது கற்பனை உணர்ச்சிகளேயாகும்.

மாயை என்று சொல்லக்கூடிய மயக்கநிலையை அறுத்து, ஆணவத்திலிருந்தும் அதனல் ஏற்படக்கூடிய கர்மங்களிலிருந்தும் எம்மைக் காக்கவல்ல ஒரேயொரு சக்திதான் இறைவன். பல நாமங்களினலும் பல உருவங்களிலும் வழிபட்டாலும் சிவனுகவும் சக்தியாகவும் நின்று மாயையைத் தோற்றுவிப்பவரும் பின்பு மாயையை அறுப்பவரும் பரம்பொருளான பிரம்மமே. இத்னை நினைவுறுத்துதற்காகவே நாம் மூன்று கூறுகளாகத் திருநீற்றை அணிந்து கொள்ளுகின்றேம். அதாவது மாயையால் ஏற்படக்கூடிய ஆணவமேலீட்டால் கர்மம் என்று கூறப்படும் எம்முடைய செயற்பாடுகள் ஆகியவற்றை மாயையை அகற்றுவதன் மூலம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரக்கூடியவர் எல்லாம் வல்ல எம்பிரானேயன்றி வேறு யார்? இத் திருநீறு என்பது உடல் அழிந்தபின் மிஞ்சக்கூடிய சாம்பலேயாகும். தம்மை உடலென்று மதித்து, தம்மை யாரென்று உணர்ந்து கொள்ளாத சீவன்கள் தோன்றும் போது ஏற்படும் மயக்கநிலையும், அதனல் தொடரும் ஆணவ கன்மங்களும் முடிவுக்கு வருவது உடல் அழியும் போது தான். இதனுலேயே மாயையால் பீடிக்கப்பட்டு ஆணவத்தின் காரணமாய்க் கர்மங்களில் ஈடுபட்டிருக்கும் உடல்கள் உடல் அழிந்த பின் மிஞ்சக்கூடிய் சாம்பலை நெற்றியில் அணிந்து கொள்ளுதல் அதன் தார்ப்பரியத்தை அறிந்து தம்மை உணர இறைவன் கருணையை நாடுகின்றன. ஆகவே திருநீற்றை அணிபவர்கள் அதன் தார்ப்பரியத்தை அறிந்து கொள்வது முக்கியம். அறிந்து கொண்டு மாயையும் ஆணவமும் கர்மமும் இப்பிறவியிலேயே தொலைவதற்கு இறைவனை வேண்டுவோம்.

சும்மா இரு என்றுர் சிவயோகசுவாமிகள். சும்மா இரு என்பது கருமங்கள் புரியாதிருப்பது. செயலற்று இருப்பது. செயலற்று இருப்பதற்கு ஆணவம் அழிய வேண்டும். ஆணவம் அழிய மாயை அகலவேண்டும். அதனைவிட்டு நாங்கள் ஆணவமேலீட்டால் தொடர்ந்து கருமங்களைச் செய்து வருவோமாயின் அதன் விளைவுதான் தொடர்ந்துவரும் பிறவிகள். ஆணவமேலீட்டால் ஆசைகள் பெருகப்பெருக பிறவித்தளை மேலும் இறுகும். பூர்த்தியாகாத ஆசைகளை அனுபவிக்குமுகமாக மேலும் மேலும் பிறப்புக்களுக்கு ஆளாவோம். பிரமத்துடன் இரண்டறக் கலந்து பேரின்பத்தில் திளைக்க விரும்பும் ஆன்மா அழியக்கூடிய உடலால் கட்டுப்படுத்தப்படுகின்றது, விடுதலை இல்லாது தவிக்கின்றது என்ற உணர்வு ஏற்படுமேயானல் சீவன் தன்னை அறிந்து கொண்டது என்பது புலனுகும். உணர்ந்துகொண்டால் நிறவித்தளையை அறுப்பதற்கு நாம் இறைவனைத் தியானிப்போம்.

நெய்யை ஊற்ற ஊற்ற தீ எவ்வாறு வளருமோ அதேபோல் புலனின்பத்தில் ஈடுபட ஈடுபட ஆசைகள் பெருகும். அந்த ஆசைத்தீ கொழுந்துவிட்டு எரிய எரிய ஆத்மா வேதனையடைகின்றது. இவ்வாறு ஆத்மாவை வேதனையடையச்செய்யும் செயல்களைப் பாவங்களென்றும் சாந்தி அளிக்கக்கூடிய செயல்களைப் புண்ணியங்கள் என்றும் கூறலாம். இப்பாவ புண்ணியங்களே எமது அடுத்த பிறவிகளை நிர்ணயிக்கின்றன. ஒருவன் ஒரு கொலையைச் செய்வது அச்செயல் ஆணவமேலீட்டால் எழுந்த ஆசையின் நிமித்தமாகவோ, அல்லது பற்றுதலின் நிமித்தமாகவோ அல்லது தானே பாதுகாவலன் என்ற கற்பனையின் நிமித்தமாகவோ இருக்கலாம். அவ்வாறு மேலிட்ட ஆணவமே, ஆசையோ, பற்றுதலோ தான் பாவமாகுமேயன்றிக் கொலை புரியும் செயலன்று. மிருகத்தையோ வேறு உடலையோ கொல்லும் ஒருவன் ஐம்பூதங்களாலான அவ்வுடலை அதன் உற்பத்திஸ்தானத்திற்கு செல்ல வழிவகுக்கிருனேயல்லாது அதனல் கட்டுபடுத்தப்பட்டிருக்கும் ஆத்மாவை அழிக்கமுடியாது. ஆத்மா ஆக்கத்திற்கும் அழிவிற்கும் அப்பாற்பட்டது.

புண்ணியம் பாவம் என்பது ஆத்மாவுக்குச் செய்யும் செயல்களால் ஏற்படும் உயர்வு தாழ்வையே குறிப்பனவாகும். பிறவிகளை நீடிக்கச் செய்யும் செயல்களைப் பாவங்களென்றும் பிறவித்தளைகளை அறுத்து ஆத்மாவை விடுதலையடையச்செய்யும் செயல்களைப் புண்ணியங்களென்றும் கூறலாம். இதே நோக்கில் சொர்க்கம் நரகம் என்பன ஆத்மா ஈசனுடன் ஐக்கியப்படும் நிலையையும், திரும்பத் திரும்பப் பிறவிக் கடலில் அமிழ்ந்துவதையுமே குறிக்கும். சொர்க்கமென்றே நரகமென்றே வேறு இடங்கள் கிடையா. நாம் எம்மை மறந்து மயக்குற்ற நிலையில் இன்பதுன்பம் என்ற கற்பனைகளில் உழல்வதே நரகம் தான். சீவன்கள் பிறப்பெடுத்து, தம்மை யாரென்று உணராது மயக்குற்ற நிலையில் ஐம்புலன்களின் அடிமையாக வாழும் இவ்வுலகமே நரகம் தான். அதே வேளையில் ஐம்புலவேட்கையை அடக்கி ஆத்மாவின் தன்மையை உணர்ந்து ஆனந்தத்திற்காக, விடுதலைக்காக தியானத்தில் ஈடுபட்டு அமைதி காண்போமானல் இவ்வுலகம் சொர்க்கம் தான். இந்த நிலையை அடைந்த சீவன் எங்கும் எல்லாவற்றிலும் எப்பொழுதும் இறைவனை, பிரம்மத்தைக் காண்கிறது. பேதங்கள் அகல்கின்றன. எல்லா செயல்களும் இறைவன் செயல்களே என்று உணர்கின்றது. இறப்பைப்பற்றிய அச்சத்தை விடுகின்றது. இறப்பது தானல்ல, இந்த உடலே என்பதை உணர்கின்றது. அஞ்சுவதுமில்லை அஞ்சப்படுவதுமில்லை என்ற நிலையை அடைகின்றது. இந்நிலை சொர்க்கமேயன்றி வேறென்ன?

இராமலிங்க சுவாமிகள் தமது பாடலொன்றில் உலகமாகவும், அதில் தங்கும் உயிர்களாகவும், உயிர்களின் மலத்தை நீக்கும் அருள்வள்ளலாகவும், முருகனுவும், விநாயகராகவும், அன்னை பரமேஸ்வரியாகவும், அச்சுதனுகவும், முப்புரமெரித்த விரிசடைக் கடவுளாகவும் விளங்கும் பேரின்பப் பெரும் ஒளியே வணக்கம் என்று பிரமத்தைத் துதிக்கிறுர். இதையேதான் தவ சிரேஷ்டர் சிவயோக சுவாமிகளும் கடல், மலை, நான், நீ, உற்றுர், உறவினர், மிருகங்கள், பறவைகள் எல்லாம் இறைவனே என்று கூறுகிறுர். இதனை நாம் ஏற்றுக்கொண்டால் முரண்பாடுகள்,பேதங்கள், கற்பனைகள் எல்லாம் மறைந்து போகும். மயக்கம் அகலும்.

ஓம் தத் சத்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# நமது சொந்தங்கள்

நமக்குச் சொந்தமல்லாத பொருட்களே நாம் நமக்குச் சொந்தம் என்று எண்ணியும் இவை நமக்குச் சொந்தம் என்று கூறியும் மதிமயங்கி நிற்கின்றேம்.

இந்த வீடு நம்முதடையது என்கிறேம். இதற்குமுன் எத்தனேயோ பேர் அதனே என்னுடையது என்னுடையது என்று கூறினுர்கள். நமக்குப் பின்னல் பலர் அவ்வாறு கூற இருக்கிறுர்கள். இந்த உலகங்கள் யாவும் இறைவனுடையவை. எல்லாவற்றையும் உடையவராதலின் இறைவனுக்கு உடையவர் என்ற பேருண்டு. எல்லாம் அவனுடைய உடமையாதலினல் மணிவாசகரும் ஓரிடத்தில் உடையானே என்று இறைவனேப் பார்த்து விழிக்கிறுர். நமது விட்டில் வாழும் சகல உயிரினங்களும் கூட எமது வீட்டை தமது வீடு என்று எண்ணுகின்றன. அதுபோலவே எல்லாம் இறைவனுடைய உடமையாக இருக்க நாம் அவற்றை நம்முடையவை என்று எண்ணி மயங்குகிறேம். என்னே எமது அறியாமை.

இந்த உடம்பு எமக்குச் சொந்தமன்று. இது இறைவன் எமக்குக் கொடுத்த ஓர் வாடகை வண்டி. இதில் ஏறி நாம் பிரயாணம் பண்ணுகிறேம். ஒரு குறிப்பிட்ட காலத்தை இறைவன் நமக்கு அறவிட்டுக் கொடுத்துள்ளார். அந்தக் கால எல்லேக்குள் நாம் முத்தியுலகை நாடிப் பிரயாணம் செய்ய வேண்டும். நாம் வேறு உலகை நாடிப் போய்க் கொண்டிருக்கிறேம். சாவதற்கு தயாராகிறேம். இதையும்விட எமதுஉடம்மை நெருப்பு தனக்கென்றும் புழுதனக்கென்றும் சிலமிருகங்கள் தமக்கென்றும் கூறுகின்றன. நாம் நம்முடையது என்று கருதி ஜபம் தவம் தியானம் ஆலயவழிபாடு ஒன்றிலும் ஈடுபடாமல் தினமும் விதவிதமாக உண்டு உடுத்து சாவதற்கே விரைகின்றேம். எனது இந்த பிரபஞ்சம் முழுவதும் இறைவனுடையது. அதாவது ஸ்வம் சொத்து எல்லாவற்றையும் சொந்தமாக உடையவராதலின் தாம் நாம் ஸ்வாமி என்ற பெயரால் இறைவனே அழைக்கிறேம்.

உதாரணமாக ஓர் உண்மைக் கதையை நோக்குவோம். ஓர் நாள் ஓர் முதலியார் வீட்டிற்கு பற்றற்ற பரம ஞானி ஒருவர் விருந்தினராக வந்தார். முதலியாரும் ஞானியாரின் பாதங்களேத் தொட்டு நமஸ்கரித்துவிட்டு அவரை ஆசனத்தில் அமர்த்தி இப்போதே நீங்கள் உணவு அருந்த வேண்டும் எனக்கேட்டுக் கொண்டார். முனிவரோ முதலியாரைச் சோதித்த பின்னரே உணவு அருந்துவதாக தீர்மானித்துவிட்டார். எனவே முனிவரும் உம்மை சோதித்த பின்பே உணவு அருந்துவேன் என்று கூறினுர். முனிவரும்

ஐயா உமக்குச் செல்வம் எவ்வளவு உண்டு?
சுவாமி 22 ஆயிரம் ரூபா தான் உண்டு.
குழந்தைகள் எத்தனே பேர்
சுவாமி ஒரே புதல்வன் தான்
உமக்கு என்ன வயது?
சுவாமி எனக்கு வயது மூன்று வருஷமும் ஐந்து மாதமும் ஏழுநாட்களும் பதினுறரை மணியும் என்றுன்.

முனிவருக்கோ பெருஞ்சினம் வந்தது. ஐயா நீர் பேசுவதெல்லாம் பொய்யாக இருக்கிறதே நான் பொய்யர் வீட்டில் புசியேன் என்றுர் முனிவர். முதலியார் முனிவரின் காலில் வீழ்ந்து அடியேன் ஒருநாளும் பொய் சொல்லமாட்டேன். சற்று மன்னித்து என் உண்மையைக் கேட்பீராகுக என்றுர்.

முதலியார் முதலில் தன் வரவுசெலவுப் புத்தகத்தைக் காட்டினுர். அதில் ஒருலட்சம் ரூபாய் இருந்தது. எனினும் நான் தர்மக்கணக்கில் இதுவரை இருபத்தி இரண்டாயிரமே செலவழித்துள்ளேன். தர்மம் செய்துள்ள பணம்தானே என்னுடையது. இப்போது நான் மாண்டால் இப்பெட்டியில் உள்ள பணம் என்னுடன் வராது. உடன் வருவது தான் தர்மம் புரிந்த இருபத்திரண்டாயிரம் தான். ஆகவேதான் எனக்குச் சொந்தமான இருபத்திரண்டாயிரம் ரூபாய் உண்டு என்றேன். முனிவர் இதைக் கேள்விப்பட்டு மிகவும் வியப்புற்றுர். அடுத்து சுவாமி எனக்குப் பிறந்த பிள்ளே நால்வர். ஆனல் என்பிள்ளே ஒருவன் தான். நீ சொல்வதன் கருத்து என்ன என்றுர் முனிவர். சுவாமி விளங்க வைக்கிறேன். மகனே நடராஜா என்று அழைத்தார் முதலியார். சீட்டு விளேயாடுகிறேன் வரமுடியாது என்றுன் மூத்தவன். இரண்டாவது மகனேப் பார்த்து மகனே வேல்சாமி. ஏன் கத்துகிறீர்கள் என்னல் இப்போது வரமுடியாது. மூன்றுவது மகன் சிவசாமியைப் பார்த்து மகனே சிவசாமி. ஐயோ பூமிக்கு சுமையாக இன்னும் ஏன் இருக்கிறீர்கள் என்னல் உங்களுடன் பேசவரமுடியாது. கடைசி மகனே நோக்கி மகனே கந்தசாமி. கந்தசாமி ஓடிவந்து பிதாவையும் முனிவரையும் தொழுது உங்கட்கு பால் கொண்டு வரட்டுமா பழம் கொண்டு வரட்டுமா? என விஞவிய படி விசிறி எடுத்து விசிறிக் கொண்டிருந்தான். அப்பப்பா முனிவரே அந்த மூவரும் என் புதல்வர்களா? முற்பிறவியில் பட்டகடன் காரர்கள். இவன் ஒருவன் தான் என் பிள்ளே என்றுர் முதலியார். முனிவரும் உன்கருத்து உவகையைத் தருகிறது. இனி வயது பற்றிக் கூறிய கருத்து என்ன என்றுர்.

சுவாமி அடியேன் நாள் ஒன்றிற்கு 1 1/2 மணி நேரம் தான் வழிபாடு செய்கிறேன். மிகுதி நேரமெல்லாம் குடும்பத்திற்காகவும் வயிற்றிற்காகவும் உழைக்கிறேன். பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே! இறைவனேப் பூசிக்கும் நேரம்தான் எனக்குச் சொந்தம். அடியேன் பிறந்து 60 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஐந்து வயதிலிருந்து ஒருநாள் ஒன்றிற்கு 1 1/2 மணி நேரம் பூசை செய்கிறேன். அந்த மணித்தியாலக் கணக்கில் பார்த்தால் அடியேனுக்குச் சொந்தமான வயது மூன்று ஆண்டுகள் ஐந்து மாதம் ஏழு நாளும் ஆகும்.

எனவே 1) தருமம் செய்த பணம் எனக்குச் சொந்தம்.
2) என் கருத்தை அனுசரிக்கிறவனே என்சொந்த மகன்.
3) பூசை செய்த நேரம் எனக்குச் சொந்தம்.

இவைகளைக் கேட்டு முனிவர் பெரிதும் மகிழ்ந்தார். அவர் வீட்டில் உண்டு வாழ்த்திச் சென்றுர். எனவே நாமும் நமக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய காரியங்களில் ஈடுபட்டு இறைவனே எம் சொந்தமாக்க முயல்வோமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

எழுதியர் செல்வி யோகா சர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏத்துக பொன்னடி

''மனிதப்பிறவி, ஆன்மவிடுதலையில் விருப்பம், மகான்களின் தொடர்பு ஆகிய மூன்று பேறுகளும் பெறுதற்கரியதும், இறைவனுடைய அருளாலேயே எமக்கு கிடைக்கக் கூடியதுமாகும்,'' என்று அறுசமய ஸ்தாபகரான ஸ்ரீ ஆதிசங்கரர் தமது விவேக சூடாமணியில் கூறியுள்ளார்.

பெறுதற்கரிய மனிதப்பிறவி எமக்கு கிடைத்துள்ளது. கீதையில் கூறப்பட்டுள்ள ஜீவன் முக்தனுக்கு உதாரணமாக விளங்கிய சிவயோக சுவாமிகளின் ஆசீர்வாதம் எமக்கு உண்டு. இந்த பிறவிப் பெருங்கடலில் வழியறியாது தத்தளிக்கும் எமது வாழ்வாம் கப்பலுக்கு கலங்கரை விளக்கமாக அவருடைய வாழ்வும், வாக்கும் விளங்குகிறது. ஜீவன் முக்தருக்கு இலக்கணமாக விளங்கிய அவருடைய நற்சிந்தனைகளை குருவாக்காகவே ஏற்று அதன்படி எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். அவர் காட்டிய பாதையில் நடப்பதுதான் உண்மையான ''திருவடி வழிபாடு'' ஆகும். குருவை சாதாரண மனிதனுகக் கருதுபவன் ஆத்ம ஈடேற்றம் பெறம்டியாது என்பது பரமஹம்ஸர் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் வாக்காகும். ஆகவே தான் நமது சாஸ்திரங்கள்

**''குரு ப்ரஹ்மா, குருர்விஷ்ணு, குருர்தேவோ மஹேஸ்வர**
**குரு சாக்ஷாத் பரப் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம''**

என்று குருவின் பெருமையை உன்னதப்படுத்துகின்றன.

சுவாமிகள் தமது நற்சிந்தனையில் ''ஏத்துக பொன்னடி'' என்ற தலைப்பின் கீழ் ஆன்மீக வாழ்க்கை நெறியை எளிய தமிழில் விளக்கிக் கூறியுள்ளார். அதிகாலையில் எழுந்திருக்க வேண்டும் என்ற நியமத்தை முதலில் கூறி நாம ஜெபத்தின் அவசியத்தைக் கூறுகின்ருர். இறைவனுடைய நாமம் மந்திரசக்திமிகுந்தது. எந்த தெய்வத்தினுடைய நாமத்தை நாம் உச்சரிக்கின்ருேமோ அந்தத் தெய்வத்தினுடைய தெய்வீக குணங்கள் நம்மை வந்தடைகின்றன. நாமமும், நாமத்திற்குரியவனும் ஒன்று. ஆகவே தான் இறைவனுடைய திருநாமத்தை உச்சரிக்கும் அளவு நாம் தெய்வீகத்தன்மையைப் பெறுவோம்.

**''நற்ற வா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே''**
என்பது சுந்தரர் வாக்கு.

**அழுதுபுலம்புக:-** புத்திரப்பேறு கிடைக்கவில்லையென்று கண்ணீர் ஆறுகப் பெருகிவிடும் மாந்தர் பலர். செல்வத்தைப் பெறவில்லையே என்று மனம் புழுங்குபவர் பலர். ஆனுல் ஈசுவரனைக் காணவில்லையே என்று துக்கித்து அழுபவர் எத்தனை பேர்? வெகுசிலரே. ''தேடுகிறவனுக்குத்தான் பொருள் கிடைக்கும் ஈசுவரனுக்காக அழுபவன் தான் அவனைக் காண்பான்'' என்பது ஸ்ரீராமகிருஷ்ணருடைய உபதேசம். இதயமானது தூய்மை அடைந்தால் இயல்பாகவே இறையுணர்வு ஏற்படுகின்றது. தூய்மையே உருவானவர் இறைவன். ''அழுதால் உன்னைப் பெறலாமே'' என்கிருர் மணிவாசகப் பெருந்தகை. கப்பலில் உள்ள திசை காட்டும் கருவியானது எப்போதும் வடதிசையைக் காட்டுவதுபோல் எமது மனமானது எப்போதும் இறைவனை நோக்கி இருக்கவேண்டும். ''இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்று இறைவனை மையமாகக் கொண்ட வாழ்க்கை நெறி சிவபுராணத்தில் அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளது.

**''நலமிலன் நண்ணுர்க்கு நண்ணினர்க்கு நல்லன் சலமிலன் பேர் சங்கரன்''**
என்கிறது திருவருட்பயன்

இறைவனை அண்டியவர்க்கு அவனுடைய அருள் நிச்சயமாகக் கிடைக்கும். இறைவன் விருப்பு வெறுப்பு இல்லாதவன். எல்லோரிடத்தும் அவனுடைய கருணையாகிய காற்று சமமாக வீசுகிறது. யார் இதயமாகிய பாய்மரத்தை விரித்து விடுகிருர்களோ அவர்கள் பிறவிப் பெருங்கடலை சுலபமாக கடந்து விடுகிருர்கள்.

**தன்னைப்போல் சகலமும் ஓங்குக:-** ''ஒன்ருகக் காண்பதே காட்சி'' என்பது நமது முன்னேர் கண்ட தத்துவ முடிவு. சனுதன தர்மத்தின் அடிப்படைக் கோட்பாடு, வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதாகும். நாம் இந்த உலகில் காணும் வேற்றுமைக்குப் பின்னுல் ஒரு ஒற்றுமை இழையோடிக் கொண்டிருக்கிறது. ஒரு மாலையில் பலவிதமான நிறங்களைக் கொண்ட மலர்களை இணைக்கும் நார் போல உலகில் காணப்படும் ஜீவராசிகள் அனைத்துக்கும் பின்னுல் ஒரு தெய்வ சக்தி உண்டு. ''மணிமாலையில் பல மணிகளையும் இனைக்கும் நூல் போன்று நான் அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளேன்.'' என்பது கண்ணனின் கனிமொழி. ''வானுகி, மண்ணுகி, வளியாகி, ஒளியாகி, ஊனுகி, உயிராகி'' என்பது மணிவாசகர் திருவாசகம். அனைத்திற்கும் பின்னுல் இருப்பது பரம்பொருளே ஆகும். அது தன்னை வெளிப்படுத்தும் கருவிதான் வேறுபடுகின்றது. ஜீவனுக்குப் பின்னுல், ஆத்மாவுக்கு ஆத்மாவாக அந்தராத்மாவாக இருப்பவன் இறைவனே. சீவனை சிவனுக மதித்து தொண்டு செய்வதே மேலான சிவத்தொண்டாகும். சிவனைச் சிவலிங்கத்தில் கண்டு வழிபடுவது சிறந்ததாஞலும் சிவனை எவன் சீவனில் கண்டு வழிபடுகிருனே அவனே சிறந்த சிவபக்தன் ஆவான். எனக்குள் இருக்கும் சிவனே எல்லாருள்ளும் விளங்குகிருன் என்ற அறிவு விளக்கம் எமக்கு ஏற்பட்டு விட்டால் நாம் அனைவரையும் தன்னைப் போல் சகலமும் ஓங்குவோம்.

**கண்ணைப் போலக் காக்க அறத்தை:-** ''தர்மதை யார் காக்கின்ருனே அவனை தர்மம் காக்கும்'' என்கிறது ராமாயணம். வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தர்மம் உண்டு. தர்மமே வாழ்வின் அடிப்படை. நான்கு புருஷார்த்தங்களுள் தர்மத்திற்கு முதலிடம் கொடுத்தார்கள். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களுள், அறத்தை அடிப்படையாகக் கொண்டு பொருளீட்டி, அறத்திற்குட்பட்டு இன்பம் துய்த்து, இறுதியில் மேலான தர்மமாகிய வீட்டின்பத்தை அடைதலே சனுதன தர்மம் காட்டும் வாழ்க்கை நெறியாகும்.

**நல்லார் உறவு கொள்க:-** நெருப்பில் போடப்பட்ட ஈரவிறகானது சீக்கிரத்தில் உலர்ந்து எரியத் தொடங்குகிறது. அதுபோல, ஸாது சங்கமானது உலகப்பற்றுள்ள ஜனங்களின் மனத்திலுள்ள காமமும் ஆசையுமாகிய ஈரப்பசையை வற்றச் செய்கிறது. அப்பால் அவர்களிடம் விவேகமாகிய நெருப்பு நன்ருக எரியும்.

கரி நெருப்பின் தொடர்பினுல் ஜொலிக்கும் அனலாகவே மாறுகிறது. காய்ந்த வாழைநார் மலரின் தொடர்பினுல் மாலையாக உருவெடுத்து இறைவனின் திருவுருவை அலங்கரிக்கிறது. இவ்வாறு சாதாரண பொருட்கள் மேலான பொருளின் தொடர்பினுல் மேல் நிலைக்கு உயர்த்தப்படுவதற்கான உதாரணங்களாகும். அது போல பாவிகளும் மகான்களின் தொடர்பினுல் உன்னத நிலைக்கு உயர்த்தப்படுகிருர்கள்.

**மின்னை ஒத்த வாழ்வை வெறுக்க:-** உடல் நிலையில்லாதது. பிறப்பு, வளர்ச்சி, இருப்பு, தேய்வு, மூப்பு, மரணம் ஆகிய மாற்றங்களை அடைவது இந்த உடல். இந்த உலகமும், உலக வாழ்க்கையும் உண்மையில் ஒரு கனவு போன்றதேயாகும். இதனைப் புரிந்து கொண்ட உண்மை ஞானிக்கு உலக ஆசாபாசங்களினுல் சாதாரண மக்களுக்கு நேரும் இன்ப துன்பங்கள் வருவதற்கு இடமில்லை. அறிவு முதிர்ச்சி பெற்றவர்களுக்கு ஜாலவித்தை பொய் என்பது தெரியும். அதைப்போலவே ஞானிகளும் இந்த உலக விவகாரங்களைப் பொய் என்று உள்ளங்கை நெல்லிக்கனி போல் உணர்ந்திருக்கிருர்கள். அறிவு முதிர்ச்சி பெருத குழந்தைகளைப் போல அஞ்ஞானம் எனும் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ள உலகியலில் மக்கள் உலகை உண்மையென்றே நம்புகிருர்கள். அதனுல் ஆயிரக்கணக்கான துன்பங்களைத் தங்களுக்குத் தாங்களே உண்டாக்கிக் கொள்கிருர்கள்.

நிரந்தரமான நித்திய உண்மை ஒன்றுதான். அதுவே பரம்பொருள். பிரமத்தை அனுபூதியின் வாயிலாக நேருக்கு நேரே சுயமாக உணர்ந்தவனே பிரம்ம ஞானி. அவனே ஜீவன் முக்தன். இந்த உலகில் வாழும் போதே மெய்ஞானத்தைப் பெற்றவன் அவனுவான். அத்தகைய ஞானிகள் பரம்பரையில் வந்தவர் தான் சிவயோக சுவாமிகள்.

எனவேன இப்புனித தினத்தில் சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனையை மையமாகக் கொண்டு சில ஆன்மீக கருத்துக்களை சிந்திக்க ஏற்பாடு செய்த ஈழத்து திருநெறித் தமிழ் மன்றத்திற்கு வாழ்த்துக்கள் கூறி இச் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். ***(சிவயோக சுவாமிகளின் குருபூசையில் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தஜி ஆற்றிய அருளுரை)***

---

# காந்திஜி கண்டு பிடித்த சத்தியாக்கிரகம்

சத்தியாக்கிரகம் என்ற சொல் கண்டு பிடிப்பதற்கு முன்னரே அந்தக் தத்துவம் தோன்றி விட்டது எனக் காந்திஜி கூறுகிருர். குஜராத் மொழியில் கூட 'சாத்துவிக எதிர்ப்பு' என்று உபயோகித்தார்களாம். ஒருநாள் ஐரோப்பியர்களின் கூட்டம் ஒன்றிற்குப் போயிருந்த போது ''சாத்வீக எதிர்ப்பு'' என்பதற்கு மிகக் குறுகிய பொருள் உணர்த்தப்படுவதை கண்டேன். அதுமட்டமல்லாது அது பலவீனர்களின் ஆயுதமாகவும் கருதப்பட்டது. அதில் பகைமைக்கு இடம் உண்டு என்பதையும் அதுவே பலாத்காரமாக வளர்ந்து விடக்கூடும் என்பதையும் உணர்ந்து கொண்டேன். இந்த கருத்துக்களை எல்லாம் மறுத்துரைத்து இந்தியாவின் உண்மையான தன்மையை விளக்க வேண்டிய நிலையில் இப்போராட்டத்தைக் குறிப்பிடுவதற்கு ஒரு புதிய சொல்லை இந்தியர் கண்டு பிடித்தாக வேண்டும் என்ற நிலை என்னுக்குள் உருவாகியது.

நான் எவ்வளவு முயன்றுபார்த்தும் ஒரு புதிய பெயரை என்னுல் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனுல் இது சம்பந்தமாக ஓர் சிறந்த யோசனையைக் கூறுபவருக்கு ஒரு சிறுபரிசு அளிப்பதாக ''இந்தியன் ஒபீனியன்'' பத்திரிகை மூலம் அறிவித்தேன். இதன் பயனுக மகன்லால் காந்தி ''சாத்கிரகம்'' (சத்-உண்மை ஆக்கிரகம்-உறுதி) என்ற சொல்லை உருவாக்கி அதற்குரிய பரிசைப் பெற்றார். ஆனுல் அது இன்னும் தெளிவாக இருக்கட்டும் என்பதற்காக அதைச் ''சத்தியாக்கிரகம்'' என்று நான் மாற்றினேன். அன்றிலிருந்து குஜராத்தியில் அந்தச் சொல் வழங்கலாயிற்று.

-காந்திஜி

★ *வானத்தில் பிரகாசிக்கும் பிரபஞ்சத்திற்கெல்லாம் உயிரளிக்கும் வெப்பத்தைக் கொடுக்கிறது. ஆனுல் அவன் அருகில் எவனும் சென்ருல் அது அவனைச் சுட்டு சாம்பலாக்கிவிடும். தெய்வீகத் தன்மையும் அதைப்போலவே இருக்கிறது. அஹிம்சையைக் கடைப்பிடிக்குமளவு நம்மிடம் தெய்வாம்சம் நிறைந்து விளங்குகிறது. ஆனுல் நாம் தெய்வமாகவே முடியாது.*

★ *பல வருஷங்களாக நான் கோழையாக இருந்தேன். அப்போது ஹிம்சையைக் கைக்கொண்டேன். என் கோழைத்தனத்தை உதறிவிட்ட மாத்திரத்தில் நான் அஹிம்சையைக் கைக்கொண்டேன்.*

★ *நாம் அஹிம்சை என்ற சாஸ்திரத்தை துருவித் துருவிப் பார்க்கும் ஓர் ஏழை ஆராய்ச்சியாளன். கண்ணுக்குத் தென்படாமல் மறைந்திருக்கும் அதன் ஆழங்கள் என் சக ஊழியர்களைத் தடுமாறச் செய்வது போலவே என்னையும் சில சமயங்களில் தடுமாறச் செய்கிறது.*

★ *நம் தவறுகளுக்காக நாம் வருந்துவதற்கும். இன்றைய நிலையைவிட மேலான பரிசுத்தமான நிலையை அடைய விரும்புவதற்கும் சின்னமாக விளங்குகிறது பிரார்த்தனை.*

★ *கருணை என்னும் பேறு கடவுள் தந்த பெரும் செல்வமாகும்.*

★ *கருணையின் தத்துவத்தை இயல்பாக உணர்ந்து நடப்பவன், ஒருசமயம் வையகமே தன்னிடம் இருப்பதைக் காண்பான்.*

★ *கைமாறு கருதாமல் பிறருக்காக துன்பத்தை மேற்கொண்டால் அப்போது நம் அழுகைக்குரல் விண்ணுலகத்திற்கு எட்டும். ஆண்டவனின் அருளும் கிட்டும்.*

-காந்திஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தி சிந்தி சிந்தி சிவகதி

'நமது உயிருக்கு உயிராக இருப்பவர் கடவுளே' எனத் தொடங்கும் திருவாய் மொழியே நற்சிந்தனை எனும் தலையங்கத்துடன் முதன் முதல் மலர்ந்த அருள் வாசகமாகும். இவ்வருள்வாசகம் சிவதொண்டன் முதலாவது மலரின் மூன்றாவது இதழில் மலர்ந்தது. சிவதொண்டன் இரு இதழ்கள் மலர்ந்து மூன்றாவது இதழுக்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்த வேளையில், இதழாசிரியர் உள்ளத்திலே, யோகர் சுவாமியினது வாக்கியப் பிரசாதத்தை ஏந்தி வருவது சிவ தொண்டனுக்குச் சிறப்பளிக்கும் எனும் எண்ணம் உதித்தது. அவர் சுவாமியைத் தரிசிக்கச் சென்ற ஒரு சமயத்தில் தருணமறிந்து தமது உளப்பாட்டைக் கூறினார். சுவாமி முதலில் இவ்வாறான கருமத்துக்கு உடன்படாதவர் போலவே தோன்றினார். பின்னர் 'எழுதும்' எனக்கூறி இவ்வமுத மொழியினை மொழிந்தார். பக்குவமாக எழுதிக் கொண்டதும் இதற்கோர் தலையங்கமிட இதழாசிரியர் உள்ளம் நாடியது. சுவாமி உரைப்பகுதியை வாசிக்குமாறு கூறிக்கவனமாகக் கேட்டிருந்தார். பின்னர் இவையெல்லாம் நல்ல சிந்தனைகள் தானே எனக் கூறினார். இவ்வாறாக நற்சிந்தனை என்னும் ஒண்முடி சூடிய இந்த நல்லமுதமொழி சிவதொண்டன் இதழில் மலர்ந்தது.

இவ்வருள்வாசகம் மூன்று அதிகரணங்களாகப் பகுத்தும் பொருள் கொள்ளத்தக்கது.

**முதல் அதிகரணம்**

**நமது உயிருக்கு உயிராக இருப்பவர் கடவுளே**
**ஆதலால்**
**நாம் அவரது உடைமை**
**அவரது அடிமை**
**நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே**
**அவரை ஒரு போதும் மறந்திருக்க முடியாது.**

என்பது முதல் அதிகரணம். இம்முதல் அதிகரணத்தில் நாம் இறைசிந்தனையை எமது இயற்கைச்சுபாவமாகக் கொண்ட இறையடியாராக உள்ளோம் எனும் உண்மை உணர்த்தப்பட்டுள்ளது. இவ்வதிகரணத்தின் முதல்வாசகம் இவ்வதிகரணம் நிலைநிறுத்த முயலும் உண்மைக்கான உறுதியான அத்திவாரமாக அமைந்திருக்கிறது. நமது உயிருக்கு உயிராக இருப்பவர் கடவுளே எனும் அம்முதல் வாசகத்திலுள்ள நமது எனும் பன்மைப் பெயர் அளவிடக்கூடாதவாறு விரிந்து தோன்றும் கோலங்களையெல்லாம் உணர்த்தும் சொல்லாகும். உயிர் எனும் சொல் அக்கோலங்கள் தோறும் நிற்கும் சீவர்களைக் குறிக்கிறது. உயிருக்கு உயிராய் இருப்பவர் கடவுளே எனும் பகுதி ஆருயிர் தோறும் அதுவதுவாய் நிற்கும் பேருயிரான இறைவனின் முதன்மையை உணர்த்துகிறது. பலவாகிய கோலங்கள் எனும் 'ம' கரப்பொருளையும், சீவர்களாகிய 'உ' கரப்பொருளையும், இறையாகிய 'அ' கரப்பொருளையும் உணர்த்தும் இவ்வாசகம் 'அகரத்தில் உகரம் மகரம் அமரும் (நற்சிந்தனை) எனும் பிரணவ மந்திரவாசகத்தின் பயிலுந்தமிழிலமைந்த உயிர்ப்புள்ள விளக்கமாகும். காயத்திரி மந்திரத்தில் வரும் 'ஸவிதுர்' என்பதன் விளக்கமும் இதுவே. உபநிடங்களில் ஆன்மா பரமான்மா இரணிய கர்ப்பன் எனும் பதங்களால் சுட்டப்படுவதும் 'சீவன் சிவன்' எனும் இவ்வுண்மையேயாகும். ஆகவே, பிரணவமந்திரம் ஆதியவற்றால் அரண்செய்யப்படும் ஒரு பொருள் பொதிந்த மொழியே இவ்வதிகரணத்தின் அடிப்படையாக உள்ளது.

இவ்வடிப்படையினின்று எழும் விளக்கத்தைக் குறிகாட்டுவதாக ஆதலால் எனும் அடையாளச் சொல் உளது.

**நாம் அவரது உடைமை**
**அவரது அடிமை**
**நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே**

என்பதில் விளக்கம் உளது.நாம் அவரது உடைமை என்பதில் வரும் நாம் நமது சட உடற்கோலங்களைக் குறிக்கும். இக்கோலங்கள் மாத்துாவெளியாய் இருக்கும் பரமான்மாவின் சங்கற்ப மாத்திரத்தால் தோற்றம் பெறுகின்றன; நிலைக்கின்றன; ஒடுங்குகின்றன. இவற்றில் சட உடற்கோலங்களால் ஆவது ஒன்றுமில்லை. உடல் தன்னிட்டமாகவே தோன்றியதோ? அதன் இளமை கழிவதும், முதுமை வருவதும் மீளாத்துயில் அணைவதும் அதன் இட்டப்படிதான் ஆவனவோ? 'அடிமை' என்பதன் தோன்றா எழுவாயான நாம் உயிர்களைக் குறிப்பது, உயிர் உடல் போன்று சடமன்று, அது உயிர்ப்புள்ளது. ஆனால் அவ்வுயிர்ப்பு பேருயிராகிய இறைவனிடமிருந்தே பெறப்படுகிறது. ஆதலால் உயிருக்கு இஷ்டா சுதந்திரம் இல்லை. அது இறை ஆணையின் வழி இயங்கும் அடிமையாகும். நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே எனும் வாசகம் என்செயலாவது யாதொன்றும் இல்லை; எல்லாம் எனை ஆளும் ஈசன் செயல் எனும் உண்மையை உணர்த்துவது. இம்மூன்று வாசகங்களும் நான் எனது என்று அகங்கரிக்கும் உணர்வின் கருவேரை அறுத்தெறிக்கின்றன. இறைவனையன்றி நான் எனும் தன்மை இல்லையாதலாலும் இறைவன் செயலன்றி எனது செயல் இல்லையாதலாலும் 'நான்' என வேறான ஒன்றில்லை என அறுதியிடுகின்றன. வேறாகாத தன்மையை அறுதியிட்டுணர்த்தவே அத்துவிதமாயிருக்கும் உண்மை ஒன்றே எஞ்சி நிற்கிறது. அஃதாவது இவ்வாசகங்கள் சிவனடியார் சிவத்திலும் வேறாகாதவர் எனும் சுத்தாத்துவித விளக்கத்தைத் தந்து நிற்கின்றன. இவ்விளக்கத்திற் பெறும் தெளிபொருள், நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது எனும் வாசகத்தில் உளது. தெய்வத்துள் வைக்கப்பட்டவர்களாகிய நாம் வேறொரு சிந்தனையுமின்றித் தெய்வசிந்தையொன்றே உடையவராயுள்ளோம். இச்சிந்தை கணமேனும் நம்மை விட்டு நீங்குவதில்லை. கணமேனும் மறப்பதில்லையாதலால் நினைத்துப் பார்க்க வேண்டிய அவசியமும் நேர்வதில்லை. ஆகவே நினைப்பு மறப்பற்ற நீளநினைதலை இயல்பாக உடையவராக உள்ளோம். நினை என்றொரு ஏவலுக்கு இடமில்லாத வகையில் 'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்' உடைமையே எமது இயற்கைச் சுபாவமாம்.

இவ்வதிகரணத்தின் முதல் வாசகம் உறுதியான அத்திவாரத்தைப் போன்றது. இடைநின்ற மூன்று வாசகங்களும் உறுதியான அத்திவாரத்தில் எழுந்த வச்சிரத்தம்பங்களை ஒத்தன. இறுதி வாசகம் அவ்வச்சிரத்தம்பங்கள் தாங்கி நிற்கும்பகலசத்தை நிகர்த்தது.

உடைமை முதல் சுத்தாத்துவித இயற்கை வரை விரிந்து நிற்கும் இம்முதல் அதிகரணம் வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்த ஞானத்தின் சாரமாகும்.

**இரண்டாம் அதிகரணம்**

**நமக்கு ஒரு குறைவுமில்லை**
**நாம் என்று முள்ளோம்**
**எங்கு மிருக்கிறோம்**
**எல்லாமறிவோம்.**

எனும் பகுதி இரண்டாது அதிகரணமாகும். இவ்வதிகரணம் நாம் அது எனும் அத்துவித ஞானத்தை உணர்த்துகிறது. நாம் ஆதல், அழிதல், கூடுதல் குறைதல், சுருங்குதல் விரிதல் எனும் விகாரங்களற்ற சுத்தபரி பூரணத்தில் சுகித்திருக்கிறோம். நமக்கு இவ்வுலகம் முற்றும் அழிந்துபட்டாலும் குறைவொன்றும் நேரப் போவதில்லை. நாம் இப்பாழ் மாய வெய்யக் கூறனைத்தும் கடந்த எல்லையில் குறைவிலா நிறைவாக உள்ளோம். நாம் இன்றும் அன்றும் என்றுமுள்ள நித்திய வஸ்து எம்மைப் பிறப்பு இறப்புத் தீண்டாது. நாம் பிறப்பிறப்பில்லாப் பெருமானாக என்றுமுள்ளோம். நாம் இங்கும் அங்கும் எங்கும் நிறைந்த விண்போன்ற வியாபகர்; அங்கு இங்கென்று போக்குவரவு புரிதற்கிடமில்லாதவாறு எங்கும் செறிந்த பொருளாயுள்ளோம். நாம் நிறைதருசித்து; சின்மயமே எமதியற்கை. ஆகவே நாம் அறிவானந்த மயமாயுள்ள சச்சிதானந்தப் பொருளாக உள்ளோம். இது எமது மாறாத என்றுமுள்ள இயல்பாகும். இவ்வியல்பிலே என்றும் இருந்தபடியே இருக்கிறோம்.

'அது' வாக அப்படியே உள்ள கேவலாத்துவித ஞானத்தைக் கூறும் இவ்வதிகரணம் வேதாந்தபரமானதுமாகும்

**மூன்றாம் அதிகரணம்**

**இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்துக் கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வதத்துவத்தை அடைவோமாக;**

என்பது மூன்றாவது அதிகரணம், இவ்வதிகரணம் முதலதிகரணத்துச் சுத்தாத்துவித ஞானத்தாலும், இரண்டாம் அதிகரணத்துக் கேவலாத்துவித ஞானத்தாலும் சுட்டப்படும் அத்துவித ஞானத்தைச், சுவாநுபூதியில் உணர்தற்கான சாதனையைக் கூறுகிறது. அறிவென்பது படித்தறிவதும், கண்டறிவதுமன்று; அநுபூதியே அறிவாம். (It is not knowing, it is not seeing, but being) ஆதலால் நாம் சிவனடியார், நாம் அது எனும் திருமந்திரங்களின் பொருளை அநுபூதியில் உணர்ந்து அதுவாயமைந்திருத்தலே மெய்ஞ்ஞானமாகும். இந்த மெய்ஞ்ஞானத் தெளிவில் நிலைத்திருத்தல் வேண்டுமென்பதை மேலான தெய்வதத்துவத்தை அடைவோமாக எனும் ஆசிமொழி உணர்த்துகிறது. மேலான தெய்வதத்துவத்தை அடைவதற்கான உயர் ஞான சாதனை இடையறாத சிவசிந்தனையேயாம். நாம் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானியராக - நாம் அதுவாக உள்ளோம் என்பதே உண்மையாகும். இவ்வுண்மையை மறந்து விட்டதே எம்மைக் கீழ்மைக் குணங்கள் பற்றிக் கொள்வதற்கும், தெய்வதத்துவத்தை நீங்குதற்கும் காரணமாயமைந்து விட்டது. ஆதலினால் நமது இயற்கைச் சுபாவத்தை அடைவதற்குரிய நேர்வழி ஞாபகப்படுத்தலேயாகும். ஞாபகப்படுத்தலே பெரிய சாதனை என்பது சுவாமியின் அருள்மொழி. மறந்துவிட்ட ஒன்றை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருவதற்கான உபாயம் அம்மறந்துவிட்ட ஒன்றை மீண்டும், மீண்டும் நினைத்துப் பார்த்தலே என்பது தெளிவு. சிவசிந்தனை எமது இயற்கைச் சுபாவமாதலால், மேற்பரப்பு அலைகளை ஒத்த உலகசிந்தனைக்கப் பாலுள்ள கடலினும் பெரிதான அச்சிவசிந்தனை நம்மை விழுங்கிக் கொள்ளும். அது நாமாக உள்ளோமாதலால் அது நாம் எனும் அகலாத்தியானத்தால் அதுவாக வாவோம்.

**'சிந்தி சிந்தி சிந்தி சிவகதி**
**மந்திர மிதுவே மனத்திடை மதியே**

என்பது சுவாமிகளது அருள்வாசகம். இச்சிவசிந்தனையைச் சாதனையாகக் கொள்ள வேண்டுமென்பதை 'இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்து' எனும் பகுதி உணர்த்துகிறது. சிவசிந்தனை எனும் சாதனையே சுவாமி இவ்வருள்வாசகத்தால் சிவதொண்டர்க்கு உணர்த்தும் முக்கிய விடயமாகும். இம் முக்கியத்துவம் கருதியே இவ்வருள்வாசகம் நற்சிந்தனை எனும் ஒண்முடி சூடி வெளி வந்துள்ளது.

**ஏது (சான்றுரை)**

'சந்ததமு மெனதுசெயல் நினதுசெயல் யானெனுந்தன்மை
நினையன்றியில்லாத் தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவமிதுவே'
என்னுந் தாயுமானார் அருமைத் திருவாக்கே இதற்குப் போதிய சான்று.

இப்பகுதி இவ்வருள் வாசகத்தின் முதலிரு அதிகரணங்களும் உணர்த்தும் உண்மைக்கான சான்றுரையாகும். இச்சான்றுரையான அருமைத் திருவாக்கு தாயுமான சுவாமிகள் பாடற்றிரட்டின் பரிபூரணானந்தம் பகுதியிலுள்ள ஐந்தாவது பாடலின் இடம் பெற்றுள்ளது. வேறலேன் எனும் வாக்கு இரண்டாவது அதிகரணத்து வேதாந்த பரமான ஞானத்தின் சான்றுரையாகும். சந்தமுமெனது செயல் நினதுசெயல் யானெனுந் தன்மை நினையன்றில்லாத் தன்மையால் வேறலேன் எனும் அருமைத் திருவாக்கு முதல் அதிகரணத்து வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்த ஞானத்தின் சான்றுரையாகும். இருதத்துவங்களும் வேறலேன் எனும் ஒரே அத்துவித உண்மையைக் கூறுவதால் சமரச சுபாவமுடையன. ஆனால் வேதாந்தம் வேறிலேன் எனும் மேனிலையில் நின்று கூறுகிறது. சித்தாந்தம் நாம் உடைமை எனும் நிலை தொட்டு வேறலேன் எனும் நிலைவரை தெளிவுபடச் சொல்கிறது. (வேதாந்த சித்தாந்த சமரச சுபாவம் பற்றி விளங்க முயல்வார்க்கு இது ஓர் சிறந்த திறவு கோலாகும்)

இவ்வருள்வாசகம் உயிர்ப்புள்ள இரு பெரிய இந்து தத்துவ ஞானங்களின் சாராம் சங்களை மூலவேராகக் கொண்டது. கட்டுரைவன்மையும் தர்க்க ஒழுங்குமுடையது. எளிமையும் இனிமையும் வாய்ந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக அநுபூதியில் மலர்ந்தது. அநுபூதியில் நிலைக்கும் சாதனை வழியை ஆசிமொழியாய் அருள்வது. இஃது மறைஞான இலக்கியச்சுவை உணர்ந்தோர்க்கு நல்விருந்து. உண்மை நெறிச்செல்லும் ஞானசாதகர்க்கோவெனின் ஓர் ஒப்பற்ற திருமந்திரம்.

**— நன்றி சிவதொண்டன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் அறியோம்

*(கடந்த இதழின் தொடர்ச்சி)*

2. கற்றதனுல் ஆய பயனென் கொல் வாலறிவன்
நற் தாள் தோழாரெனின்.

சொற்ப கால உலக வாழ்க்கையை சிறப்போடு வாழ்வதற்கு சேகரிக்கும் அறிவைக் கருவில் மிதித்த கமலப்பாதத்தை நினைந்து வணங்காமல் கற்பதனுல் ஒரு பயனும் அளிக்காது.

3. மலர் மிசை ஏகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

கருவில் மிதித்த தாமரை மலரில் வீற்றிருக்கும் மாண்புமிக்க இறைவனின் திருவடி உணர்ந்தவரின் ஆத்மா தனது சிவபூமியில் நீடு வாழ்வார்.

4. வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

விருப்பு வெறுப்பு இல்லாத திருப்பாதமாகிய அகார எழுத்து சேர்ந்தவர்க்கு துன்பம் ஒருபொழுதும் தாக்காது.

5. இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

மெய்ப்பொருளான கருவில் மிதித்த இறைவனின் திருப்பாதத்தைச் சேர்ந்து ஐந்தெழுத்தை ஓதிப் புகழ்ந்தவர் அஞ்ஞானம் சேரும் நல்வினை தீவினைகளில் ஈடுபடமாட்டார்.

6. பொறி வாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடு வாழ்வார்.

ஐம்புலன்களின் ஆசைகளை அறுத்து பொய்யான மாயையை வெல்லும் சன்மார்க்கமான அகார எழுத்து ஏறும் ஐந்தெழுத்து வழி கடைப் பிடித்தால் நெடுங்காலம் வாழலாம்.

7. தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

ஒப்பு உவமை இல்லாத இறைவனின் கமலப்பாதம், அகார எழுத்து அறிந்து ஓதி உணர்ந்தவர்க்கல்லால் உலக வாழ்வில் பிணியாலும் நோயாலும் எழும் மனக்கவலைகள் மாற்றல் அரிது.

8. அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால்
பிறவாழி நீதித்தல் அரிது.

பிராணுயாமம் செய்யும் ஆத்மாவின் இணை அடியான அகார எழுத்து அறிந்து ஓதி உணர்ந்தவர்க்கல்லது புறக்கடை இச்சைகளிலிருந்து நீங்குவது மிகக் கடினம்.

9. கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை.

எண்குணத்தானுகிய ஆத்மாவை பின்வரும் திருமந்திரங்கள் விளக்குகின் றன.

2123. அத்தன் அமைத்த உடல் இரு கூறினிற்
சுத்தமதாகும் சூக்குமம் சொல்லிடில்
சத்தம் பரிசம் ரூபம் ரசகந்தம்
புத்தி மனம் ஆங்காரம் புரி அட்டகாயமே.

மெய்ப்பொருளாகிய இறைவன் அமைத்த உடம்பை உடல் உயிரென்று இரு கூறுகளாகப் பிரிக்கலாம். உடல் நிலையற்ற அழியும் தூலப்பொருள். உயிரானது எட்டுப்புரியையுடைய புனிதமான நிலையான சூக்குமப் பொருள். அது கருவில் மிதித்த இறைவனின் கமலப்பாதத்திலிருந்து முளைத்ததனுல் சீவனுக்கும் சிவ னுக்கும் ஒரு வேறுபாடில்லை, திருமந்திரம்:-

1932. வித்தினிலன்றி முளையில்லை அம்முளை
வித்தினிலன்றி வெளிப்படுமாறில்லை
வித்தும் முளையும் உடனல்ல வேறிலை
அத்தன்மையாகும் அரண்நெறி காணுமே.

வித்தைச் 'சத்' என்றும் சிவன் என்றும் இறைவன், ஈசன், பராபரனென்று ஆண்பாலாகக் குறித்தும், வித்திலிருந்து எழுந்த உயிரை சத்தி என்றும், சக்தியென் றும் இறைவி, ஈஸ்வரி பராபரையென்றும் பெண்பாலாகக் குறித்து மெய்ப்பொ ருளான வேதப் பொருளை அர்த்த நாரீஸ்வரனென்றும் விளக்கியுள்ளார்கள்.

கீழ்க்காணும் திருமந்திரமும் எட்டுக் குணங்களைக் கூறுகின்றது.

1. ஒன்றவன் தானே இரண்டு அவன் இன் அருள்
நின்றனன் மூன்றினுள் நான்கு உணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழு உம்பர்ச்
சென்று அவன் தான் இருந்தான் உணர்ந்து எட்டே.

அத்வைதப் பொருளான அவன் சிவனும் சக்தியுமாய் ஓமெனும் முப்பதத் தில் நின்று பிரம்மாவின் நான்கு முகங்களான சப்தபிரமம், நாதப்பிரமம், சோதிபி ரமம், அமுதபிரமம் ஆகியவற்றை உணர்ந்து ஐம்புலன்களான மெய் வாய் கண் மூக்கு செவி முதலியனவென்று, குண்டலினிசக்தியில் மூலதாரம் சிவஸ்தித்தா னம், மணிப்புரம் அனகத்த விசுத்த அஞ்ஞை முதலிய படிகளில் விரிந்து ஏழாம் இடமாகிய சகஸ்றான ஏறி ஆத்மா அடைய வேண்டிய எட்டாம் ஸ்தானமாகிய சமாதி, நிர்வாண நிலை உணர்ந்து நின்றான். இந்நிலையில் மனம் புத்தி ஆங்கார மாகிய பொறிகள் அடங்கிவிடும்.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார்.

எண்பத்து நூறாயிரம் யோனிகள் வெவ்வேறு உருவகங்களில் பிறப்பதும் இறப்பதுமாய் வாழும் சீவராசிகளுக்குள் மானிடப்பிறப்பு எடுத்து வாழும் எமக்கே கருவில் மிதித்த இறைவனின் திருவடியில் நின்று பிறவிப் பெருங்கடல் நீந்தி பிறப்பை அறுப்பர். இறைவன் அடி சேராதவர் பிறப்பு இறப்பு வளயத்தில் சிக்குப்பட்டு நின்று அழுந்துவர்.

140. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றுங்
கல்லார் அறிவிலாதார்

மெய்ப்பொருளான ஆத்மாவோடு ஒட்டி வாழாமல் அழியும் உலகப்பொ ருள்களோடும் சிற்றின்பங்களிலும் ஒட்டி வாழ்பவர் பலகற்று இருந்தாலும் கல் லாத அஞ்ஞானிகளாய் இருப்பர். கீழ்க்காணும் திருமந்திரங்கள் விளக்கமாகக் கூறுகின்றது.

760. உயருறுவார் உலகத்தொடுங் கூடிய
பயனுறுவார் பலர் தாமறியாமற்
செயலுறுவார் சிலர் சிந்தையிலாமற்
கயலுறு கண்ணியைக் காணகிலாரே

நெற்றிக் கண்ணில் வெளிப்படும் பராசக்தியின் சோதியைக் காணகிலார்.

1626. பிறப்பை அறியார் பல பிச்சை செய் மாந்தர்
சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்
மறப்பிலராகிய மாதவஞ் செய்வார்
பிறப்பினை நீக்கும் பெருமை பெற்றாரே

ஐந்தெழுத்தில் இயங்கும் ஆத்ம சொரூபத்தில் மனத்தை பதித்து தியானம் செய்தலே தவம்.

திருக்குறள்

266. தவம் செய்வார் தம் கருமம் செய்வார் மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுட்பட்டு

இத்தாவர சங்கமத்துள் எத்தனையோ பிறப்புக்கள் எடுத்து இழைத்து இப்போ கிடைத்தற்கு அரிய மானிடப் பிறப்பு எடுத்து வாழ்கின்ருேம். இப்பிறப் பில் நாம் செய்யவேண்டிய கருமம் தவம் செய்து எம் உயிரை பிறப்பு இறப்பு வளயத்திலிருந்து மீட்பது. திருமந்திரம் அழகாக விளக்குகின்றது.

1677. உடலிற் துவக்கிய வேடம் உயிருக்காக
உடல் கழன்ருல் வேடம் உடனே கழரும்
உடல் உயிர் உண்மை ஓர்ந்து கொள்ளாதார்
கடலில் அகப்பட்ட கட்டை ஒத்தாரே.

கடலில் அகப்பட்ட கட்டை அலைகளில் சிக்குப்பட்டு தாழுவதும் மிதப்ப துமாய் அமைதியற்று அல்லல்படும். அதுபோல் உயிரை அறிந்து ஒன்றி உணராத வர்களின் உலக வாழ்வு துன்பகரமாய் அமையும்.

2106. இக்காயம் நீக்கி இனி ஒரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம் வழி தேடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக்காவதென்று
அக்காலம் முன்னம் அருள் பெறலாமே.

இப்பிறவி தப்பினுல் பிறகு எப்ப இப்பிறவி வாய்க்குமோ நாமறியோம். இப்பிறவியை மிருகங்கள் போல் வாழ்ந்து வீணுக்காமல் மெய்ப்பொருளை உணரும் சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்து அருள் பெறுவோம்.

2090. பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரான் அடி பேணுர்
பெறுதற்கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற்கரிய தோர் பேறு இழந்தாரே.

பெறுதற்கரிய மானிடப் பிறப்பை பெற்றும் பிறப்பின் நோக்கத்தை மறந்து அடைய வேண்டிய பெரும்பேற்றை இழந்தார்கள்.

*(தொடரும்)*

Published by the Hindu Council of Sri Lanka, 9 Castle Lane, Colombo 4. Editor Dr. S. Sanmugasundaran, 5 Moor Road, Colombo 6
and Printed by Anandа Press, 82/5 Sir Ratnajoth Saravanamuttu Mawatha, Colombo 13.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org